

# நினைவுகளின் அலைதல்

நிவேதா உதயராயன்

# நினைவுககளில் அலைதல்

**நிவேதா உதயன்**

பூவரசி வெளியீடு

Ninaivukalill Alaithal
(poems)
By
Nevetha Uthayan ©

First Edition : dece 2016
Poovarashi : 60

ISBN : 978-93-81322-37-6

Layout : Athmira.

Pages : 100
Price : 100

PPrinted & Published by
**Poovarashi Publications**
C-63,Fist Floor ,Fist main Road, Anna Nagar East
Chennai-600102. Ph : +919600131346
poovarashimedia@gmail.com, www.Poovarashi.com

சமர்ப்பணம்...

நன்றி

# நினைவுகளில் அலைதல்

பேரா. அ.ராமசாமி
திருநெல்வேலி, தமிழ்நாடு

ஒருவரின் கவிதைகளை அவ்வப்போது வரும் பருவ இதழ்களிலோ, இணைய இதழ்களிலோ வாசித்து நினைத்துக் கொள்ளும் அனுபவமும், மொத்தமாக அவரின் கவிதைகளைத் தொகுப்பாக வாசிக்கும் அனுப வமும் ஒன்றாக இருக்க முடியாது. அவ்வப்போது வாசிக் கும் போது வாசிக்கப்பட்ட சூழலிலிருந்து கவிதைதரும் அர்த்தம் சுவாரசியமானது. அந்த அர்த்தம் மொத்த மாக வாசிக்கும்போது கிடைக்காமல்கூடப் போகலாம். காரணம் சூழல். இலக்கியப்பிரதிகள் சூழலில் தனக்கான அர்த்தங்களை உருவாக்குகின்றன சூழல் என்பது கவிதை உருவான சூழலாகவும் வாசிப்பவரின் சூழலாகவும் இருக்கிறது.

வாசிக்கப்படும் கவிதைக்குள் செயல்படும் மொழிப் பயன் பாடு, உண்டா க்கப்படும் உருவகம் அல்லது படிமம் போன் றன அந்தக் கவிதையை நின்று நிதானமாக வாசிக்கவும் யோசிக்கவும் தூண்டும். அப்படித் தூண்டக்கூடிய கவியின் கவிதைகள் கண்ணில் பட்டால்போதும் உடனடியாக வாசிக்க நினைப்பதே வாசக மனம். திரும்பத்திரும்ப வாசிக்க நேரும்போது, ஏற்கெனவே வாசித்த அதே கவி யின் கவிதைகள் நினைவுக்கு வந்துவிட்டால், அந்தக் கவியின் பெயர் வாசிப்பவரின் மனதில் தங்கும் பெயராக ஆகிவிடும். அதன் மூலம் ஒருகவி வாசகர்களிடம் தனது பாணியைக் கடத்தியவராக ஆகிவிடுவார். தொடர்ந்து அவரை வாசிக்கும்போது வாசகர்களுக்குப் பிடித்த கவியாக அவர் மாறிவிடுவார். அப்போது அந்த

வாசகரால், நமது மொழியின் முக்கிய கவிகளில் இவரும் ஒருவர் என்று நம்பப்படுவார் சொல்லப்படுவார். தொடர்ச்சியான வாசிப்புக ளைக் கருத்தாக முன்வைக்கும் திறனாய்வாளராக இருந்தால் கவி க்கு ஒரு பிம்பம் உருவாகிவிடும். நிவேதா உதயனின் இந்தக் கவிதை களுக்குள் ஒருவர் திரும்பத் திரும்ப நினைத்துக் கொள்ளத்தூண்டும் தன்மைகளும், மனதில் தங்கிவிடத் துடிக்கும் நிகழ்வுகளும் இருக்கின் றன. அந்தக் கூறுகள் எவையெனத் தேடிப்பார்க்கலாம்.

ஒருவர் தன்முன்னால் பரப்பப்படும் கவிதைகளை எப்படி வாசிப்பது என்ற கேள்வியைக் கேட்கும் ஒருவர், ஒரு கவியைச் சந்தித்தால், உங்களிடம் கவிதைகள் எவ்வாறு பிறக்கின்றன? அல்லது உருவாகி ன்றன? என்று கேட்கக்கூடும். தான் எழுதி முடித்த ஒவ்வொரு கவி தையும் எப்படி உருவானது என்று சொல்லமுடியாமல் ஒரு கவி திணறவும்கூடும் ஆனால் கவிதையைத் தொடர்ந்து வாசித்து அர்-த்தப்படுத்தும் கவிதை வாசகர் தன்னிடம் வைக்கப்பட்ட கேள்வி-க்கு விரிவான பதிலைத் தரவே செய்வார். வாசிக்கும் கவிதைக்குள் இருக்கும் பாத்திரத்தை கவிதை சொல்லியைத் தேடிக் கண்டுபிடிப் பது வாசிப்பவரின் முதல்வேலை. அந்தத் தேடலில் கவிதைக்குள் அலைவது ஆண் தன்னிலையா? அல்லது பெண் தன்னிலையா? இரண்டுமற்ற பொதுத்தன்னிலையா? என்பதை முதலில் கண்டுபிடித் துக் கொள்ளவேண்டும். அதன்பிறகு அந்தச் சொல்லிகள் யாரோடு உரையாடுகிறார்கள் என்பதும், எவை பற்றிப் பேசுகிறார்கள் என்பதும் வாசகர்களுக்குப் பிடிபடத் தொடங்கிவிடும். ஆணென்றாலும் பெண் ணென்றாலும் முதலில் உடல், சமூக அடையாளங்களால் அர்த்த ப்படுத்திக் கொள்வது நடக்கும். அவ்விரண்டும் சேர்ந்து எழுதும் கவி யின் தன்னிலைகளின் உளவியலைக் கட்டமைத்துக் கொடுக்கும். நிகழ்காலக் கவிதைகளை வாசிக்க விரும்புபவர்கள் இந்த எளிய சூத் திரத்தைப் பின்பற்றினால் போதும் எந்தவிதமான கவிதைகளையும் சுலபமாகப் புரிந்துகொள்ளலாம்.

கவி நிவேதா உதயனின் மொத்தக் கவிதைகள் என் முன்னால் பரப்பிக் கிடக்கின்றன. இப்போதுதான் அக்கவிதைகளை வாசிக்கிறேனா என்றால் நிச்சயம் இல்லை. அவரை, அவரது சில கவிதைகளை அவ்வப்போது முகநூலில் வாசித்திருக்கிறேன். அதற்கு முன்பு அவரது பதிவுகளை வாசித்திருக்கிறேன். அவர் விவரிக்கும் ஐரோப் பிய நிலவெளியில் நானும் இருந்தவன் என்பதால் அந்தப் பதிவுகள் என்னை ஈர்ப்பனவாக இருந்தன. அந்த பதிவுகள் வழியாக அவரைப்

பற்றிய சித்திரம் எனக்குள் உருவாகி இருக்கிறது. அந்தச் சித்திரத்தோடு இப்போது அவரது மொத்தக் கவிதையின் மொழிதல் முறையையும் அதற்குள் இருக்கும் கவியின் கவிதை சொல்லியின் இருப்பையும் வாசிக்க முடிகிறது. அதன்வழியாக இந்தக் கவிதைத் தொகுப்பைப் பற்றிப் பேசமுடிகிறது.

நிவேதாவின் கவிதைமொழிதல் எளிமையான வடிவம் கொண்டது. தொடங்கும்போது சொல்பவர் யாரெனக் காட்டிக்கொள்ளக்கூடாது என நினைப்பது எளிய கவிதையின் எதிர்நிலை. ஆனால் நிவேதா அப்படி நினைக்கவில்லை. இவர்தான் இதைச் சொல்கிறார் அல்லது முன்வைக்கிறார் என்பதை வெளிப்படையாகக் காட்டியபடியே தொடங்கும் எளிமை. அந்த எளிமை, கவிதையை இசையின் ரூபமாக நினைக்கிறது. மொழியின் அடுக்குகள் வழியாக உருவாக்கப்படும் தாளலயத்துக்குள் கவிதை இருப்பதாக நம்பும் கவிமனம் அது. அந்த மனத்திற்குத் தன்னைப் பற்றியும் தன்னைச் சுற்றி இருப்பவர்களைப் பற்றியும் சில எளிமையான கேள்விகளும், ஆச்சரியங்களும், குழப்பங்களும் இருக்கின்றன. அவற்றிற்கு விடைகளைத் தேடும் முயற்சியும் இருக்கிறது. இவ்விரண்டின் விளைவுகளால் உருவாகும் எண்ண ஓட்டங்களே அவரது கவிதைகள். எளிமையான கேள்விகளுக்குக் கிடைக்கும் எளிமையான பதில்கள் போதாது என்று நினைக்கும்போது எளிய கேள்விகள் கேள்விகளாகவே நிற்கின்றன கவிதைகளில். இத்தொகுப்பில் பாதிக்கும் மேலான கவிதைகள் அத்தகைய கேள்விகளை எழுப்பிப் பதில் சொல்லும் மொழிதல் முறையையே கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டுக்கு ‘எல்லை அற்ற மனம்’ என்ற தலைப்பில் எழுதப்பட்ட கவிதையை வாசித்துப் பார்க்கலாம்.

புலன்களின் புரிதலற்ற பதுங்குதல்களில்
பிடிவாதமாய் பின்னி நிற்கும்
படிநிலைகளின் பக்குவமற்ற பதங்கள்
பாகுபாடற்று என்றும்
பாழ்மனதைப் பலமிழக்கச் செய்து
பரிகாரம் தேடித் தேடியே
பரிவறுக்கச் செய்கின்றன நிதம்

என்பதான வரிகளை வாசிக்கும்போதும், ஊமைக் காயங்கள் என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள.

*மனத்தின் அடங்கா மாயைகள்*
*வாழ்வின் நாட்கள் எங்கும்*
*மர்மங்கள் புரிந்திட முடியாது*
*மயக்கம் தந்தபடி இருக்கின்றன*
*உறவின் உயிர் நாடியை*
*உலுப்பிப் பார்ப்பினும்*
*உண்மை உணரமுடியாதபடி*
*ஊமைக் காயங்களை*
*காலம் முழுவதும் விதைப்பினும்*
*உணர்தலுக்கான வலுவை*
*மழுங்கச் செய்கின்றது மனது*

*என்பதான வரிகளை வாசிக்கும்போதும் உருவாகும் சித்திரம், தனது அகத்தைத் தேடும் ஒருவரின் சித்திரமே. தனது அகநிலையைத் தேடும் இத்தகைய கவிதைகளில் இருக்கும் அதே மனம் தான்*

*நான் மரமாக நீ காற்றாகி மனதின்வழி*
*நாதங்கள் கேட்க வைத்தாய்*
*நான் நிலமாக நீ நீராகி நிதம் எனை*
*நெக்குருகியே நெகிழவைத்தாய்*
*காற்றின் ஒலியாகி கார்கால மழையாகி*
*காணும் இடமெங்கும் என்மனவீட்டில்*
*எங்கும் உன் ஒளியாக ஒளிரவைத்தாய்*

*என இன்னொரு தன்னிலையோடு உறவாடுவதையும் வாசிக்க முடிகிறது. அத்தகைய இன்னொரு மனம், இன்னொரு தன்னிலை, இன்னொரு ஆளுமை என்பன நட்பாக, காதலாக, உறவாக, பகையாக என எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் கவியின் மனம் இன்னொரு உயிரியோடு உறவாடும் மனமாகவே இருக்கிறது. மனிதர்கள் தவிர இயற்கையோ, வாழிடமோ, பிரபஞ்சத்தின் சிக்கல்களோ எல்லாம் நிவேதாவின் கவிதைப் பரப்பிற்குள் வரவில்லை. மனிதர்களை நேசித்தும், கேள்விகேட்டும், கோபித்தும், விளக்கம் சொல்லியும், அரவணைத்தும் செல்லும் அவரது கவி மனத்திற்கு இன்னொரு வெளி ஒன்றும் இருக்கிறது. கவிதைக்குள் அலையும் அந்த மனம், தனது பால்ய நினைவுகளின் அலையும் மனம்.*

*பால்ய வயது நிலப்பரப்பையும், தோட்டவெளிகளையும் வீட்டையும்*

விட்டுப் பிரிந்து விலகிநிற்கும் மனம் திரும்பவும் தேடுகிறது. அந்த விலகலுக்கான காரணத்தை நேரடியாக அனுபவித்தறியாத அந்த மனத்திற்குக் காரணங்கள் தெரிந்திருந்தாலும் கவிதையாகச் சொல்லத் தெரியவில்லை. தனது சின்ன வயது நினைவாக இருக்கும் அந்த நிலப்பரப்பு எப்படி இருக்கும்? என்ற கேள்வியைத் திரும்பத் திரும் பக் கேட்டுக் கொள்கிற ஒரு மனதைப் பல கவிதைகளில் வாசிக்க முடிகிறது.

கால்கள் புதையும் கனவுகளோடு
கண்விழித்த காட்சிகள் இன்னும்
பசுமை குலையாத பச்சை வயலாய்
பள்ளிகொள்ளும் போதில் வந்து போகின்றன
என்கிறது ஓரிடத்தில். இன்னோரிடத்தில்
காரணங்கள் அற்று நானும்
காணவே முடியாதனவற்றை
காண்பதான மாயை சுமந்து
மீண்டுவரா நாட்களின் தகிப்பில்
மனதின் மகிழ்வு தொலைய
எந்நேரமும் விடுபட எண்ணிடும்
நூலிழை பற்றியே நிதமும்
எழுந்துவர எத்தணித்தபடியே
எதுவும் முடியாது காத்திருக்கிறேன்

என்று புலம்புகிறது. அலைவதாகவும் காத்திருப்பதாகவும் சொல்லும் அந்த மனத்திற்குரிய நபர் இலங்கையில் நடக்கும் உள்நாட்டுப் போரால் புலம்பெயர்ந்தவரா? என்று தேடினால் அதற்கான ஆழமான பதிவுகள் எதையும் கவிதைக்குள் காண முடியவில்லை. அதைப் பதிவு–செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் எப்படிப்பதிவு செய்வது என்ற குழப்பம் இருக்கிறது. அந்த மனத்திற்குத் தனது சொந்த பூமியில் நடக்கும் போரும், போரினால் ஏற்படும் அழிவுகளும், மனிதர்கள் படும் துயரங்களும் தொடர்ச்சியான தகவல்களாய்க் கேட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் கேள்விப்படும் சங்கதிகள் மட்டுமே. அவரது அனுபவங்களல்ல.

கேள்விப்படும் சங்கதிகளும் தகவல்களும் உருவாக்கும் மனக் கொதிப்பு கவியின் தவிப்பாக ஆகாமல், இரக்கமாக மாறித் தன்னிர க்க வெளிப்பாடுகளாக மாறியுள்ளன. இந்தக் கவிதைக்குள் வெளிப்

*படும் அந்த மனத்தை நீங்கள் வாசிக்கும்போது எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.*

*ஏனோ எம் மண்ணின் நினைவு*
*எப்போதும் எம்முடனே இருக்கின்றது*
*ஆனாலும் எந்தையர் எமக்காய் வாழ*
*ஏதுமற்று ஏதிலியாய் இருக்கின்றது*
*காய்ந்து போன காட்சிகள் மட்டும்*
*கனவுகளின் மீட்டல்களோடு*
*கந்தலாகிப் போன சுற்றங்களுடன்*
*காற்றில் மட்டுமே கேட்கும் கானமாய்*
*கைவிட்டுப் போன எம் கனவுகள் போல*
*எப்போதாவது வரும் ஏக்கங்கள் தாங்கி*
*நிலையான நினைவாகி நிலைத்துப் போனது*
*(நினைவுகளாய் வீடும் அயலும் )*

*தனது அகத்தை நோக்கிய கேள்விகளே ஆயினும், புறத்தை – சூழலை நோக்கிய கேள்விகளே ஆயினும், எல்லாமே எளிமையான கேள்விகள் தான். ஆழப்பதிந்து கிடக்கும் சொந்தத் தேசத்து நிலப்பரப்பு பற்றிய நினைவலைகளும்கூட நேரடியனுபவமற்ற எளிய ஞாபகங்கள் தான். நிவேதாவைப் போன்ற கவிகள் ஒவ்வொரு மொழியிலும் இருக்கவே செய்கின்றனர். எப்போதும் எளிய வாழ்க்கையை, எளிமையான மொழியால் சொல்லிவிடும் திறமைகொண்ட கவிகளுக்கும் ஒரு மொழிப்பரப்பில் இடம் இருக்கவே செய்கின்றன. எளிமையின் அழகை ரசிக்க முடிந்தால், நிவேதா உதயனின் கவிதைகளை ரசிக்க முடியும். எளிமையான கேள்விகளுக்கான விடையை நீங்களே உருவாக்கிக் கொள்ள முடிந்தால் நிவேதாவின் கவிதைகள் உங்களுக்குக் கவிதையனுபவத்தையும் ருசியையும் உண்டாக்கும். ருசியை உருவாக்கிக் கடத்த அவர் பெரிதும் நம்பியிருப்பது ஒருவிதச் சந்தலயத்தை. ஆற்றிலிருந்து பிரிந்து வாய்க்கால் வழியாக ஓடும் நீரோட்டம் எழுப்பும் ஒலியலைகளைப்போல இந்தக் கவிதைக்குள் இருக்கும் சந்தலயம், மென்மையாக ஓடிக்கொண்டிருக்கிறது. லயத்தோடு கூடிய எளிய ஓட்டத்தை ரசிக்கும் விருப்பம் உள்ளவர்களுக்குத் தேவையான உத்தரவாதமான கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளன.*

*கவி நிவேதா உதயனுக்கு வாழ்த்துக்கள்*

# நிவேதா உதயன்

# கட்டவிழும் மனம்

*சொட்டுச் சொட்டாய் இன்பம்*
*சொக்க வைக்கிறது*
*சுற்றிவர எல்லாம்*
*சுகந்தமாய் இனிக்கிறது*

*சித்திரங்கள் பலவும்*
*சிறகு விரித்து*
*சிங்காரமாய் வந்து*
*செம்மை கொள்ள வைக்கிறது*

*சில கனவு இனிக்கிறது*
*சிலது கனக்கிறது*
*சோர்வற்று மனம்*
*சொப்பனங்கள் காண்கிறது*

*சொந்தம் மறக்கிறது*
*சுமைகள் அறுக்கிறது*
*சோகம் மறந்த நிலை*
*சிகரங்கள் தோற்கிறது*

*செம்மை படர்ந்த மனம்*
*சினம் கொள்ள மறுக்கிறது*
*சிந்தை முழுதும் உன்னை*
*சிவனாய் நினைக்கிறது*

*செந்தமிழே உன்னை*
*சேர்ந்திடக் கண்டேன்*
*சிதம்பர ரகசியமாய்*
*சேவிக்க உளம் கொண்டேன்.*

# என்னூரின் நினைவுகள்

*எழில் பொங்கும் என்னூரின்*
*ஏகோபித்த நினைவுகளோடு*
*என் பயணம் தொடர்கிறது*

*திருவிழாவின் தெருக்களில்*
*தென்றலாய் வந்துபோனவைகளும்*
*வீதியில் தேரோட நீரோட்டமாய்*
*நிகழ்ந்து போனவைகளும்*
*மனதில் மங்கலாக வந்து போகின்றன*

*மார்கழி மாதத்து மரகதத் துகள்களாய்*
*இன்னும் நெஞ்சத்து அடிப்பரப்பில்*
*அடர்த்தியாய் ஒட்டிக்கொண்டபடி*
*அணைத்து ஆறுதல் தருகின்றன*

*வீட்டோரத்து வெடிப்புக்களின்*
*இடைவெளிகளில் தவழும்*
*எறும்புகளின் வரிசையின் கூட்டுப்போல்*
*எல்லைகளற்று நீள்கின்றன நினைவுகள்*

*கால்கள் புதையும் கனவுகளோடு*
*கண்விழித்த காட்சிகள் இன்னும்*
*பசுமை குலையாத பச்சை வயலாய்*
*பள்ளிகொள்ளும் போதில் வந்து போகின்றன*

*எத்தனை கடந்தும் அத்தனையும்*
*அசைக்க முடியா ஆணிவேராய்*
*அடிமனத்தின் படிக்கட்டுகளில்*
*ஆழப்பதிந்து அல்லல் செய்தபடியே.*

# ஓரம் நனைக்கும் நினைவுகள்

*அஸ்தமிக்கும் பொழுதில்*
*எண்ணங்கள் எருக்களாகி*
*எட்டமுடியா எல்லைவரை*
*ஏகாந்தம் தொடரும்*

*கடுகளவு எண்ணங்கள்*
*காடளவு கருக்கொள்ளும்*
*கண்ணிமைக்கும் பொழுது கூட*
*காலாண்டாய் கனமாகும்*

*ஒரு துளி வெள்ளத்தில்*
*ஓராயிரம் புளுதிகளாய்*
*எண்ணக் கோர்வையில்*
*ஏதேதோ வந்து போகும்*

*எல்லாம் இருந்தும்*
*ஏதுமற்ற ஏதிலியாய்*
*எல்லைகள் அற்று*
*எண்ணங்கள் நீண்டாடும்*

*வண்ணங்கள் நிறமிழந்து*
*வக்கற்று நிற்பதுபோல்*
*வகையற்ற கனவுகள்*
*வந்து வந்து நிழலாடும்*

*வார்த்தைகள் இழந்த மனம்*
*வாழ்வின்றி தவிப்பதுபோல்*
*வித்திட்ட நினைவுகள்*
*வெளிதனில் விரைந்தோடும்*

*ஒன்றெண்ணி ஒன்றற்று*
*ஓர விழி வரம்பில்*
*ஒவ்வொரு நினைவுகளாய்*
*ஓரங்கள் நனைத்திடும்*

*கானங்கள் அற்ற வரிகளின்*
*கனதியான காட்சிகளாய்*
*கட்டுப்பாடுகள் அற்று*
*கண்முன் கலைந்தாடும்*

*கரைகாண முடியாத கனவுகளின்*
*கடைசித் துளி மட்டும்*
*காட்சியில் விரிந்திருக்க*
*கண்ணயர முடியாது கரைகிறேன்.*

# எண்ணங்கள் நகர்கின்றன

*எதிரிகளாய் எப்போதும்*
*எதையோ எதிர்பார்த்தபடி*
*எண்ணக் கரு நிறைந்து*
*அடைகாத்தல் ஏதுமின்றி*
*அத்தனையும் திசுக்களாகி*
*எல்லைகளற்று விரிந்துகொண்டே*
*எங்கும் நிறைகின்றன*

*இல்லாத வினாக்கள் காணும்*
*இடைவெளியற்ற விடைகளால்*
*எப்போதும் மனம் எங்கெங்கோ அலைந்து*
*எண்ணமுடியாத் தூரங்களை*
*எப்படியோ கடக்கிறது*

*மனதின் இசைபிற்கேற்ற*
*மாற்றமுடியா நம்பிக்கைகளொடு*
*மகுடியற்ற பாம்பாய்*
*படம்விரித்தாடிப்*
*பயம் கொள்ள வைக்கின்றது*

*எத்தனை நாள் இன்னும்*
*இருக்கும் வரை என்னும்*
*எண்ணத் தோன்றல் மீதமிருக்கும்*
*நம்பிக்கையின் சுவர்களை*
*நலிவடைய வைக்கின்றது*

*ஆனாலும் வாழ்வின் வலிந்த இழுப்பில்*
*வலியற்றிருக்க வேண்டி*
*வக்கரிக்கும் நினைவுகளை*
*விழி மூடி வசியம் செய்யப் பார்க்கிறேன்.*

# உயிர்த் துடிப்பு

*உரிமையுள்ள ஒன்றிற்காய்*
*உளம் ஏங்கி உயிர் துடிக்கும்*
*கருணையற்ற மனிதருக்கு*
*காணும்வலி கணம்கூட உணராது*

*நெஞ்சில் வெடித்தெழும்*
*நேசத்து  நிகழ்வுகளின்*
*சொல்லொணாத் துயர் சுமந்து*
*சொல்லி அழாச் சுமைகளுடன்*
*காத்திருக்கும் கணங்கள் கவி*
*சொல்லிட முடியாது*

*காலாண்டு கூடவில்லை*
*கடல்போல் அன்பு*

*காட்டாற்று வெள்ளமாய்*
*கரையுடைக்க*
*காலத்தின் வரவுக்காய்*
*காத்திருக்க மட்டுமே*
*முடிகிறது முடிவின்றி*

*முடிவேதுமில்லா*
*அண்டப் பெருவெளியில்*
*அரவமற்று அனாதையாய்*
*நிற்பதாய் உணர்கையில்*
*உள்ளத்தெழும் உணர்வின் கொடுமையில்*
*உறக்கம் மட்டுமா தொலைந்து போவது?*

# மனிதர்கள்

*மனிதர்கள் ஏன் இப்படி இருக்கின்றனர்*
*நல்லவர் கெட்டவர் அறியாது*
*நயவஞ்சகப் பேச்சுக்கள் புரியாது*
*பல்லிளித்துப் பழகும் எவரையும்*
*பால்போல என நினைத்து .....*

*மற்றவர் மனதறியாது*
*மார்க்கம் எதுவும் தெரியாது*
*மதிநுட்பமும் புரியாது*
*மடையர்களாய் இன்னும் ....*

*தரம் பிரிக்கத் தெரியாது*
*தன் தரமும் அறியாது*
*தவிலின் பக்கங்களாய்*
*தம்பட்டம் அடித்தபடி......*

*மனதின் வலி புரியாது*
*மயக்கும் வார்த்தை கண்டு*
*மறையும் அறிவு கொண்டு*
*மறைந்து வாழ்ந்தபடி .......*

*காற்றுக் கொள்ளுமட்டும்*
*கதவு திறந்தாலன்றி சுவாசம்*
*நிலைத்திடாது சுத்தமாய் ஆகிடாது ....*

*இறைவன் அறிவு தந்தான்*
*இயன்று பார்க்கச் சொன்னான்*
*சிந்தனைச் சிறகடித்து*
*சோர்வுகள் அறுத்து நீ*
*மாயைகள் மட்டற மனதைப் படிக்கவேண்டும்*

*விந்தை மனிதா நீ*
*விழிப்புற வேண்டும் இன்னும்*
*சிந்தை முழுதும் செழிப்புற வேண்டும்*
*பகுத்து அறியும் பக்குவம்*
*படித்து அறிதல் வேண்டும்.*

# தேசம்

*உனக்கும் எனக்குமான இறுமாப்பு*
*ஏகாந்த வெளிதனில்*
*எல்லைகளற்று விரிந்திருந்தது*

*அதுவே இன்று நிட்சயம் அற்றதாய்*
*நம்பிக்கையற்றதாய் நாளும்*
*நடுவானில் நூலறுந்த பட்டமாய்*
*நரகமாகிக் கொண்டிருக்கிறது*

*எந்நேரமும் உச்சரிக்கும்*
*இரகசிய மந்திரமாய் மனம்*
*ஏக்கங்கள் கண்டு இன்றும் வாழ்கிறது*
*ஏதிலியாய் எதுவுமற்று*

*வாழ்தலற்ற வகையின்றி*
*வரம்புகள் கடந்தோம் தான்*
*வகை தெரியா மூடர்களாய்*
*வெற்று வெளியில் நாமின்று*

*வேலிகள் எதுவும் இன்றி*
*விழுதுகள் கூட இன்றி*
*வேடர்களின் வில்லாய் நாம்*
*வசமானோம் வரப்புகள் இன்றி*

*விதியின் சதிதானா வீழ்ந்தது*
*மதியின் தவறிய கணக்காய்*
*மனிதம் தொலைத்த மனம்*
*மிச்சத்தின் எச்சங்களாக எங்கும்*

*எண்ணக் கணக்குகள் தவற*
*எதிரிகள் எண்ணற்றுப் போக*
*எதுமற்றவர்களாய் நாங்கள்*
*எப்படியோ வீழ்ந்தோம்*

*வீழ்ந்ததன் பின்னரான வலி*
*என்ன செய்து என்ன யார் வந்தும் என்ன*
*எதுகொண்டும் என் மனதை*
*ஆற்றவே முடியவில்லை.*

# ஈர்ப்புவிசை

*வாழ்வின் பாதைகள் எல்லாம்*
*வகுக்கப்பட்டிருக்கின்றன*
*கோடுகளோடு மேடு பள்ளங்களோடு*
*கோடுகள் அற்றதாயும்*
*நெளிந்தும் வளைந்தும்*

*ஆனாலும் நாமும் முயல்கிறோம்*
*மூழ்குகிறோம் முடிவே அற்று ஓடுகிறோம்*
*முடிந்தவை எல்லாம் செய்து*
*மூர்க்கத் தனக்களோடு மூழ்கி முத்தெடுக்கும்*
*ஆசையுடன் முடியாதவைகளுக்குமாய்*
*முடிந்தவரை மூச்சடக்கி*

*ஆனாலும் எல்லாம் அளவற்றதாகி*
*அல்லும் பகலும் ஆட்படுதளோடு*
*அகல்வினை நோக்காது குறை*
*வினை கொண்டு கூர்ப்புகள் அறியா*
*மானிடராய் கார்ப்புகள் மறவா கடையராய்*
*ஈர்புவிசையில் இழுபடும்*
*இலத்திரனியல் சாதனமாய்*

*சிந்தனை அற்றதான சிகரங்கள் தொட முடியா*
*சீர்கேடுகள் கொண்டு சிறகுகள் அற்றதாகி*
*செக்கு மாடுகளாய் தினமும்*
*சினத்தின் வசம் வார்த்தைகள் இல்லை*
*சீராவதற்கும் வழியேதும் இல்லை*
*சொற்ப நாளின் சுவைகள் அறிய*
*சூத்திரங்கள் அற்றபடி வாழ்வு.*

# வசந்தகாலம்

*வசந்த காலத்தின் வருகையோடு*
*மனம் வாசனை கொள்கிறது*
*இருண்ட வானின் எண்ணம் களைந்து*
*இயல்பாய் எல்லாம் இருக்கிறது*

*கோலங்களும் காலங்களும்*
*கோட்பாடுகள் மறந்து வாழ்வதில்லை*
*கோடு கிழித்து காலம் கடத்தாது*
*கடமைகளைச் சரிவரச் செய்கின்றன*

*ஏற்பாடுகளின் எதிர்த்தலின்றி*
*எல்லோர்க்கும் எல்லாமானதாய்*
*எள்ளளவேனும் எதிர்பார்ப்புகளின்றி*
*எல்லைகளே வகுக்க முடியாதபடி*

*பருவங்களின் செழிப்பில்*
*பார்க்குமிடமெங்கும் பக்குவமடைந்து*
*பலன் எல்லாம் படைப்பிற்க்காய்*
*பாகுபாடு கொஞ்சமுமின்றி*
*பாரெங்கும் சேவை செய்கின்றன*

*காய்களும் கனிகளும்*
*பூக்களும் புனைவுக்களுமாய்*
*புதுப்புது அர்த்தங்கள் காட்டி*
*புரையோடிப் போகாது*
*பசும் புரட்சி செய்கின்றன*

*ஆனால் நாம் நாளும் பொழுதும்*
*இயற்கையின் எச்சங்களை*
*இயல்பின் இருப்பற்றதாக்கி*
*ஏதுமற்ற எதிர்வினைகளோடு*
*எதிர்பாத்துக் காத்துக் கிடக்கிறோம்.*

# வால் நட்சத்திரங்களாய்

*காலங்கள் கடந்தன தான் எனினும்*
*கடந்து வந்த பாதைகளின்*
*கால்த்தடங்களின் வடுக்கள்*
*இன்னும் மனதில் அடையாளமாய்*

*எத்தனையோ எண்ணங்கள் சுமந்து*
*எதிர்க்க முடியாத எதிர்பார்ப்புக்களுடன்*
*இறுமாப்புக்களும் கடந்து*
*கடத்த முடியாத நாட்களுடன்*

*கனவுகளின் கட்டவிழ்ப்புக்களும்*
*கரை காணா மொட்டவிழ்தல்களுமாய்*
*முகைவெடித்து மணம் பரப்பி*
*முற்றிலும் முடிவற்றதாய் வாழ்வு*

*வானம் அளாவி வால்நட்சத்திரங்களாய்*
*எதிர்காலத்தின் எண்ணிக்கையோடு*
*ஏகாந்தத்தின் எல்லைகளற்று*
*எப்போதும் எதிர்வு கூறல்களோடாய்*

*எப்படியோ கடந்து வந்த காலத்தின்*
*கருப்பும் வெள்ளையுமான பக்கங்கள்*
*கண்ணில் அப்பப்போ தெரிகின்றது*
*காட்சிப் பிழைகளின்றி கனவுகளில்*

*எதிர்க்க முடியா ஏக்கங்கள்*
*இன்னும் இருக்கின்றன என்னுடனே*
*எப்போதாகிலும் நனவாகும் நம்பிக்கையுடன்*
*பாடையின் படுக்கைவரை பசுமையாக.*

# மீட்டல்களோடு

*என் வீடும் அயலும் என்*
*நினைவில் வந்து போனது*
*பக்கத்து வீட்டு பாட்டியும் பாட்டனும்*
*பொக்குவாய் கொண்டு சிரிக்கும் சிரிப்பும்*
*பாக்கு வெற்றிலை இடிக்கும் சத்தமும்*
*பழைய நினைவாய் வந்து போனது*

*எதிர் வீட்டு அக்காள் எமக்குத் தெரியாமல்*
*எம்வீட்டுப் பூக்களை பறித்து வந்ததும்*
*எதுவும் கூறாமல் கொடுப்புள் சிரித்து*
*எதிரி வேறென எமக்கே சொன்னதும்*
*இன்று நினைப்பினும் சிரிப்பு வருகுது*

*எங்கள் துலாவில் ஏக்கங்கள் அற்று*
*எவ்வளவு தண்ணியும் அள்ள முடித்ததும்*
*வாக்கால் வழிந்தோட கால்கள் நனைத்து*
*வரம்புடைந்து வளவு நனைந்ததும்*
*வீட்டுக்காரரின் வசைகள் கடந்து*
*வசந்தமாய் சிரித்ததும் நினைவில் நிக்குது*

*கிட்டிப் புள்ளும் கிளித்தட்டும்*
*கீரைக் கறியும் கிழங்குகளும்*
*பக்கத்து வீட்டில் பறித்த மாங்காய்*
*பருவம் தப்பிப் பழுத்த பலா*
*முறிந்து விழுந்த வாழைக்குலை*
*முற்றாது பறித்த மாவின் காய்*
*மூலையில் பூத்த முருக்கம் பூ*
*கோடியில் படர்ந்த முசுட்டை என*
*முழுவதும் நினைவில் நிற்கிறது*

*தொடருந்தின் தடம் பார்த்து*
*தொலைவுவரை தொடர்ந்ததுவும்*
*தூரத்தில் தெரிந்த பனந்தோப்பை*
*தாண்ட முடியாது தயங்கியதும்*
*தெரிந்த முகங்கள் தொலைவாய்ப் போக*
*தோப்புக்குள் இருந்த தோடம்பழத்தை*
*தொப்பியால் மூடிக் கடத்தியதும் ...*

*காலம் எங்கள் கனவு சிதைத்து*
*கோலங்கள் பல காட்டியே நிற்க*
*கனவுகள் கடந்து நாம் கண்விரிய*
*வாடைக்காற்றில் அகப்பட்ட வள்ளமாய்*
*வேர்கள் அறுத்து வெளிநாடு வந்தோம்*
*கோடை இடி என் தேசம் சிதைக்க*
*கொண்ட கொள்கை கோட்பாடிழந்து*
*காலத்தின் வசத்தில் கேள்விகளாகி*
*எத்திசையும் எம் திசையாக்கி*
*எல்லை மறந்து வாழ்கின்றோம்*

*ஏனோ எம் மண்ணின் நினைவு*
*எப்போதும் எம்முடனே இருக்கின்றது*
*ஆனாலும் எந்தையர் எமக்காய் வாழ*
*ஏதுமற்று ஏதிலியாய் இருக்கின்றது*
*காய்ந்து போன காட்சிகள் மட்டும்*
*கனவுகளின் மீட்டல்களோடு*
*கந்தலாகிப் போன சுற்றங்களுடன்*
*காற்றில் மட்டுமே கேட்கும் கானமாய்*
*கைவிட்டுப் போன எம் கனவுகள் போல*
*எப்போதாவது வரும் ஏக்கங்கள் தாங்கி*
*நிலையான நினைவாகி நிலைத்துப் போனது.*

# திக்கித் திணறி

*வானப் பெருவெளியில் வாழ்வு*
*விரிந்தே கிடக்கிறது*
*எண்ண முடியாத*
*நட்சத்திரங்களின் கணக்குகளாய்*
*எதிர்காலம் எம்முன்னே*

*மின்மினிப் பூச்சிகளாயும்*
*மெர்க்குரி விளக்குக்காளாயும் மனிதர்*
*முகமூடி அணிந்தபடி*
*விட்டில் பூச்சிகளாயும் சிலர்*
*மீள முடியாத் தூரத்தில்*

*வேடம் கட்டும் மனித வாழ்வில்*
*விதவிதமாய் வெற்றிடங்களும்*
*வேதனையின் குவியல்களுமாய்*
*விவரிக்க முடியாத வினாக்களுடன்*
*வேகத் தடைதாண்டியுமாய்*

*வீணாகிப் போன காலங்கள்*
*கணக்குகளில் வரமுடியா புள்ளிகளாய்*
*எப்பொழுதும் ஏக்கத்தின் எதிர் வினைகளுடன்*
*தாக்கம் புரிந்தபடி*
*தாங்கொணா துயரம் சுமந்தபடி*

*தேசம் கடந்தும் தெருவோர திண்ணைகளில்*
*தூங்கும் மனிதர்களாய் சிலர்*
*நாட்களின் மீதப்பரப்பை நகர்த்தி*
*நம்பிக்கைகள் கொன்று*

நகரமுடியா நினைவலைகளுள்
நிரந்தரமாய்ச் சிக்குண்டபடி

எதுவும் எப்போதும் நிலையற்றே இருக்கிறது
காட்சிகளின் நீட்சியில் கசந்தபடி
கண் மறைக்கும் கயமைகளின் காட்சிகளும்
மீதமிருக்கும் மானுடத்தின்
மிகைப்படுத்தலின் மிதப்பில் மனனம் செய்தபடி
நாட்கணக்கானாலும் நகராத வாழ்வுடனும்
தீரா ஆசைகளுடனும் திக்கித் திணறியபடி.

# வண்ணங்கள்

*எல்லையில்லா இன்பம் கொண்டு*
*மனம் சிட்டுக்குருவியாய்*
*சிறகடித்துப் பறக்கின்றது*
*எண்ணத்தின் எதிரொலியில்*
*ஏகாந்தம் களைந்து*
*எங்கேங்கோவெல்லாம்*
*பயணம் செய்கிறது*
*வானவெளி கடந்து*
*நட்சத்திரங்களூடே*
*நடமாடியபடி*
*நகர் வலம் செய்கின்றது*
*காற்று வெளிகடந்து*
*மேகப்புதையலில்*
*மடியடைந்து*
*மயக்கம் கொள்கின்றது*
*நேரத்துக்காய் நிறம் மாறும்*
*மனித வண்ணங்கள் கூட*
*என்றும் போலன்றி எங்கும்*
*நிறமிழந்து நிற்கின்றன*
*எப்போதும் இப்போதாய் இருக்க*
*என்மனம் ஆசை கொள்கின்றது*
*ஆனாலும் எதிரொலிக்கும்*
*ஆசைகளின் ஆக்கிரமிப்பு சூழும்*
*அந்த நிமிடம் வரை*
*ஆத்மாவை வேண்டியபடி*
*அந்தரங்கம் கலையாது*
*அலைகின்றேன் நான்.*

# எண்ணங்கள்

*எண்ணங்கள் எப்போதும்*
*எதிரொலிகளால் நிரப்பப்பட்டிருக்கின்றன*
*எல்லையற்ற வெற்றிடங்களின்*
*ஏகாந்தத்தில் கற்பனைகள்*
*கண்டபடி பாய்கின்றன*

*மனதின் விருப்பத்துக்கும்*
*ஆசைகளில் அலைதலுக்கும்*
*அங்கீகரிக்காதவை கூட*
*அகலக்கால் வைத்தபடி*

*எத்தனை தூரமும்*
*எத்தனை வேகமும் கொண்டதாய்*
*எந்திரங்கள் போலன்றி*
*எதிர்ப்பற்று எங்கெங்கோ அலைகின்றன*

*ஏன்தான் இத்தனை ஆசைகளோ*
*எவரோடும் ஒப்பிட்டு ஒப்பற்று*
*எதிரிகளாகின்றன எண்ணங்கள்*
*எப்போதும் எம் மனதுக்கு ஏற்றாற்போல்*
*எம்மை மட்டும் நினைவில் கொண்டபடி .*

# இயற்கை

*இயற்கை எம்மை இயன்றவரை*
*விட்டு வைத்திருக்கின்றது*
*எதோ தன்னாலான இரக்கத்தோடு*
*எல்லோரையும் இட்டு நிரப்பியபடி*

*தூயனவாய்க் காற்று துகள்களற்று*
*தலைவிரித்தாடாததால்*
*நாம் தப்பிப் பிழைக்கிறோம்*
*தரையில் நடக்கிறோம்*

*கோபத்தின் உச்சியில் ஆழ்கடல்*
*கொந்தளிக்காததால்*
*கூரைகளின் கீழ் நாம்*
*குதூகலங்கள் சுமந்தபடி*
*குளிர் காய்கிறோம்*

*தீயின் நாக்குகள் தீவிரமற்று*
*திசைமாறி இருப்பதனால்*
*தீங்குகள் அற்று நாம்*
*தில்லுமுல்லுகள் செய்தபடி*
*தினாவெட்டாய்த் திரிகிறோம்*

*பயிரிடா நிலங்கள் பரிதவிப்பின்றி*
*பக்குவமாய் இருப்பதனால்*
*பசுமை குன்றினும்*
*பாறைகளாகி பயன்பெறா மாந்தனின்*
*போலி முகம் கண்டும் தாம்*
*பொறுமை கொண்டு நிற்கின்றன.*

வானப்பெருவெளி வீழ்ந்துவிடாது
வெடிப் பிளம்புகள் சூழ்ந்துவிடாது
வெட்டி மாந்தரின் வேடிக்கை கண்டும்
வெஞ்சினம் கொண்டு வேரறுக்காது
வேடிக்கை பார்த்தபடி விண் முகடு தாண்டி
விடிகற்களாய் வீளாதிருக்கின்றன

ஆயினும் நாம் எப்போதும் எவற்றையும்
எண்ணியே பார்ப்பதில்லை
எல்லாம் இவ்வுலகில் எமக்கானதென்று
இறுமாப்புக் கொண்டு அக்கறையற்று
அல்லாடலோடு அகந்தை கொண்டு
ஆசைகளோடு ஆர்ப்பரித்திருக்கிறோம்.

# மனம்

*அலை கடலாய் ஆர்பரிக்கும்*
*அப்பப்போ அமைதி கொள்ளும்*
*எட்டாத எல்லையெல்லாம்*
*எப்படியோ கடந்துவிடும்*

*ஏட்டிக்குப் போட்டியாக*
*எதுவும் செய்துவிடும்*
*ஏக்கம் கொண்டு பின்னர்*
*எதை எதையோ எண்ணிவிடும்*

*மார்க்கம் கண்டபின்னர்*
*மட்டிலா மகிழ்ச்சி கொள்ளும்*
*முந்தை வினைப்பயனை*
*முழுதுமாய் நம்பிவிடும்*

*அன்பு கொண்டு ஆட்படும்*
*அகந்தை கொன்று அகப்படும்*
*சிந்தை நிறைந்து சிரிக்கவைக்கும்*
*செம்மை கொண்டு சிலிர்க்கும்*

*சொந்தங்கள் தேடி சொர்கங்கள் கூட*
*சந்தங்களாகி சத்தங்கள் ஓய*
*நித்தமும் ஓய்வின்றி நித்தியக் கடனாகி*
*நினைவின்றி ஓடும் மனம்.*

# தடைகள்

*தடைகள் ஏற்படும் போது*
*தவிக்கும் மனதை*
*எது கொண்டு ஆறுதல் படுத்துவது*

*பகிர்தலும் எதிர்பார்த்தாலும்*
*எப்போதுமேயானதாய்*
*நம்பிக்கையின் ஒருவிளிம்பில்*
*நகர்கிறது வாழ்வு*

*மனமிருந்தும் மனமின்றி அலைவோரை*
*புரிந்தும் புரிய மறுப்போரை*
*எது கொண்டு அளப்பது*

*மாறுதலின் நகர்வுக்குத்*
*தயார் எனச் சொன்னாலும்*
*மாற்றமுடியாது அல்லலுறும்*
*மனதைத்தான் என்ன செய்வது*

*உணர்தலற்ற நேசம்*
*உயிரற்ற நட்பு புரிதலற்ற பாசம்*
*அகல மாட்டாத மனம்*

*இத்தனையும் கொண்டு*
*இன்னும் இருக்கிறது மாசுபடா நேசம்*
*மல்லுக்கட்டிக் கொண்டு*

*எப்படி உரைத்திடினும்*
*என்மனதின் ஓலங்கள்*
*அடங்கமுடியா அவலத்துள்*
*அல்லாடிக்கொண்டே இருக்கிறது.*

# சொட்டுச் சொட்டாய்

*சொட்டுச் சொட்டாய் இன்பம்
சொக்க வைக்கிறது
சுற்றிவர எல்லாம்
சுகந்தமாய் இனிக்கிறது*

*சித்திரங்கள் பலவும்
சிறகு விரித்து
சிங்காரமாய் வந்து
செம்மை கொள்ள வைக்கிறது*

*சில கனவு இனிக்கிறது
சிலது கனக்கிறது
சோர்வற்று மனம்
சொப்பனங்கள் காண்கிறது*

*சொந்தம் மறக்கிறது
சுமைகள் அறுகிறது
சோகம் மறந்த நிலை
சிகரங்கள் தோற்கிறது*

*செம்மை படர்ந்த மனம்
சினம் கொள்ள மறுக்கிறது
சிந்தை முழுதும் உன்னை
சிவனாய் நினைக்கிறது*

*செந்தமிழே உன்னை
சேர்ந்திடக் கண்டேன்
சிதம்பர ரகசியமாய்
சேவிக்க உளம் கொண்டேன்.*

# வெறுப்பு

*ஆத்மாவின் அல்லோலகல்லோலங்கள்*
*என்றும் அடங்கிடப்போவதில்லை*
*ஆதரவே அற்றதான அன்பில்*
*அடிமுடி தேடியும் எதுவுமே*
*அகப்படப் போவதுமில்லை*

*என் மீதான உச்சபச்ச வெறுப்பில்*
*உள்ளமெங்கும் வியாபித்திருக்கும்*
*உன்மத்தங்களை உடைத்தெறிந்து*
*உயிர் கொல்லும் ஊனங்களை எல்லாம்*
*உயிரற்ரதாக்கவே மனம் ஆசை கொள்கிறது*

*உறங்கா மனதில் எந்நாளும் எழும்*
*எண்ணிலடங்கா எதிர்ப்பார்ப்புக்களை*
*எதுவுமற்றதான எதிர்வினைகளால்*
*எள்ளளவேனும் இடைவெளியின்றி*
*ஏமாற்றம் எப்போதும் நிரப்பிவிட*
*எள்ளல்களின் எதிரொலியில் மனம்*
*எதுவுமற்றதாகி விடுகின்றது*

*காரணகாரியங்கள் என்றைக்குமாய்*
*காத்திருக்கவே போவதில்லை*
*காலங்கள் கதியில் மாறினும்*
*கோலத்தில் குறுக்காய்க் கனவெழுதி*
*கொடுந்துயர் கொண்டு கணக்கெழுத*
*கண்விழித்தே நான் காணும் கனவில்*
*கணக்கில்லா கண்டுபிடிப்புக்களும்*
*கண்முன்னாலே காணாமற் போகின்றன*

*கார்காலக் கடுமை கருங்குளிராகி*
*குற்றும் கூர்கள் கண்முன்னேயாகிலும்*
*கனவும் கற்பனையும் காத்திருப்பும்*
*கணப்பொழுதும் நிலைபெயராது*
*கந்தகக் காற்றாய் ஆனபின்னும்*
*காவலற்ற மனக்குரங்கின் கதிர்வீச்சில்*
*கருகும் காலங்களின் அந்தரிப்பைக்*
*கணக்கிடவே எப்போதும் முடிவதில்லை.*

# விடிவெள்ளி

*விடிவெள்ளி மீண்டும் வானில் தெரிகிறது*
*வெடி கண்ட நிலம் போல்*
*சிதறிய மனம் மீண்டும்*
*விண்மீன்கள் கண்டு சிரிக்கின்றது*

*கொடுவானின் இடி மின்னல்*
*கொடுங் காற்று எல்லாம்*
*கோரத் தாண்டவம் ஆடி முடித்து*
*காற்று அலைகளின் சீற்றம் குறைந்து*
*கோலங்கள் காட்டி நிற்கிறது*

*வேருடன் மரங்கள் வீழ்ந்தன*
*எனினும் வாடை அடங்கி*
*மீண்ட வானின் மிதப்பின் வேகத்தில்*
*மருண்ட மேகங்களின்*
*மகிழ்ச்சி ஒலியாய் மீண்டும்*
*மின்னல் கீறி மறைகின்றன*

*ஓசை அடங்கக் காத்திருந்தேன்*
*என் ஆசை அடக்கி மேகத் தீயுள்*
*மோதும் உன் முகம் காண*
*முடிவேதும் இல்லா*
*மழை வானின் எல்லையில்*
*மண்ணொடு மண்ணாய்*
*மங்கியும் நானும் மகிழ்ந்திருப்பேன்*

*முடிவுற்ற வெளியின் முகில்கள் கடந்து*
*முடிவற்ற என் பயணம் முடிந்து*
*மலர் கண்ட வனமாய்*
*மலர்கின்ற மனம் கொண்டு*
*மீட்டும் உன் இசை கண்டு*
*முடிவிலா வானில் முடிவுகள் அற்று*
*மேவும் இசையாய் மின் மினிப் பூச்சிகள்*
*மனதசைத்துப் பறக்கின்றன.*

# ஏகாந்தத் தனிமை

*என் ஒவ்வொரு விடியலுக்கும் நீயே*
*கதிரவனாய் ஆனாய்*
*என் ஆக்கல்களின் பேசுபொருளாய்*
*அழகுகொள்ளும் எதுவும் நீயாய்*
*அறிவின் துகள்களை அறிந்தவனாய்*
*ஆர்பரிக்கும் என் மனதின் கடலாய்*
*அணைக்கும் கரையாகக்கூட ஆனாய்.*

*என்னில் எழுந்த தீப்பொறிகளை*
*உன் குளிர்வில் ஆற்றுபவனாய்*
*கற்பனையின் கனிய வளங்களை*
*கட்டுடையாது காப்பவனாய்*
*எண்ணிலடங்கா அதிர்வுகளை*
*என்னில் தோற்றுவித்து*
*ஏகாந்தத்தில் திளைக்கவைத்து*
*எதிலும் நீயாய் ஆனாய்.*

*கனவு மனதில் குளிர்நிலவாகி*
*கடும் மழையின் நீர்த்துளியாகி*
*கோடையின் கொடுமை கொன்று*
*குளிர் இரவில் தணலாய் வீசி*
*காடுகளின் நெடுமரமாய் நின்று*
*கனவுகள் இன்றிக் காட்சி தந்து*
*கண்மூட மறந்து நான் தூங்கையில்*
*சாட்சிகளாய் காதல் நெய்தாய்*
*ஒளியிழந்து நான் நிற்கிறேன்*
*ஊடுருவ முடியா இருட்டில்*

*ஒற்றைப் பனைமரம் தேடி*
*ஓசைகள் அற்ற வெளியில்*
*உனக்காக மட்டுமாய் நிற்கிறேன்*
*உறவுதந்து உயிர்ப்புடன் மீண்டும்*
*உலவிட விடுவாயா என்னை*
*உணர்விழந்து நான் உயிர்ப்பிழந்து*
*உன்மத்தமாகிட என்னை நீ*
*மண்ணில் புதைப்பாயா நானறியேன்.*

# முடிவுறாப் பயணம்

*கால் கடுக்க நடந்து வந்தும்*
*கடுகளவும் முடிவுறாப் பயணத்தின்*
*முடிவு காணா வெற்றிடங்களில்*
*வினாக்கள் இன்றும் மிச்சமிருக்கின்றன*

*உயிர்ப்பற்ற உறவுகளின்*
*ஊழ்வினைகள் கொல்லும் நிலை*
*உருக்குலையா வாழ்விலும்*
*ஓரங்களில் ஒட்டியபடி இன்றும்*

*மகிழ்ந்தாடும் மனதின் மாடி அறைகளில்*
*மறைப்பதற்கு ஏதுமற்ற மனதோடு*
*மகுடியின் ஊதல்கள் கலந்து*
*மயக்கும் வரை கேட்கின்றன*

*கிழித்த கோடுகளின் எல்லையில்*
*கிடந்தது அல்லாடும் தடைகள் தாண்டி*
*கேடயமற்ற போர் வீரனின்*
*படிமமற்ற எதிர்த்தலினூடே*
*பயணிக்கின்றது வாழ்வு*

*இறுதி மூச்சின் எண்ணங்கள்*
*எங்குமாக இருக்கப் போகின்றன*
*எட்டும்வரை முயல்வதாயும்*
*எட்டாவிடில் விடியலே அற்ற*
*இரவுகளின் எதிர்பார்ப்புக்களுடன்*
*தொடரும் வாழ்வின் வசந்தமாய்....*

# உருவமில்லா ஓசை

உருவமில்லா ஓசை கேட்டு மனம்
உன்னிடம் பித்தாய் ஆனது
உவப்புடன் தினமது ஓங்காரமாகி
உறவு கண்டிட உன்மத்தம் கொண்டு
உன்னைத் தினம் எதிர்பார்த்தது

உயிரின் நிகரிலா உணர்வாய்
உரிமைகொண்டே நீ வந்தாய்
உயிரில் கலந்த உறவே என்றாய்
உயிர் தினம் உனக்காய்த் துடிக்கிறதென்றாய்
உன்முகம் காணத் தவிக்கிறதென்றாய்

உண்மை என்றெண்ணி உயிர் துடிக்க
உன்னில் அன்றே கலந்துவிட்டேன்
உலகு முழுதும் எனக்காய் என்று
உயிர்ப்புடன் நானும் உலவிவந்தேன்
உளம் எங்கும் உவகை கொண்டிட
உற்றவனாய் உட்பொருளாய் கண்டிட
உயிர் கூடி உணார்வுகொண்டிட
உனையே நானாய்க் கண்டிருந்தேன்

ஊனமுற்றதாய் ஆனதுன் உறவு
உயிர் குடிக்கும் விதமாய் மனது
உண்மை கொன்று உள்ளம் தின்று
ஊசலாடும் மனதும் கொண்டு
உணர்வுகளைத் தினமும் கொன்று
உள்ளத்தின் இரக்கம் துறக்க
உயிரின் வலி அறிய மறுத்து
உயிர்ப்பிழந்து உடல் சுமக்க
உறுதுணையாய் நிற்கின்றாய்

உனைத் துறந்து நிதமும் நான்
உயிர் காவும் வழியும் இன்றி
உடல்க் கூண்டு ஓசை இழக்க
ஒப்பாரியின் ஓசைகளில்
உறக்கமின்றித் தவிக்கின்றேன்.

## எனக்காக

*எனக்காக நீ என்றும் தவித்ததில்லை*
*எனக்காக எதையும் நீ இழந்ததில்லை*
*உனக்காக நான் என்றும்*
*நினைவுகளுடன் போராடி*
*உன் துயரில் நான் அழுது*
*உன் நோயில் நான் துவண்டு*
*நீ நனைந்தால் நான் குளிர்ந்து*
*நெருப்பின் சுவாலைக்குள் தினம்*
*நீந்தியபடி நடக்கின்றேன்*

*உனக்காக என்னை இழந்தது போதும்*
*உன்னிடம் என்றும் தோற்றதும் போதும்*
*உயிர் கொல்லும் நோயாய்*
*உன் செயல்களில் தினம்*
*வலிதாங்கி வலிதாங்கி*
*ஊனுருக்கி உருக்குலைந்து*
*உணர்வுகளின் எச்சங்களில்*
*உயிர் வாழ்ந்ததும் போதும்*

*இனி எனக்காக நான் வாழ்ந்து*
*என் நினைவில் நான் எரிந்து*
*உன் நினைவை உருக்கிட*
*எப்போதும் போலன்றி*
*எல்லைகள் தாண்டியும்*
*எதிரியாகும் உன்னினைவை*
*ஏதுமற்ற வெளி தாண்டி*
*எண்ணதுளியின் சுவடு கூட*
*எதுவுமின்றித் தொலைத்திட*
*இடம் தேடி அலைகின்றேன்.*

# யாதுமாகி

*யாதுமாகி நிற்பான் அவன்
எதுமாகி நிற்பான் அவன்
எனக்குள்ளே அவனாகி
எதற்குள்ளும் அவனேயாகி
உயிரின் உணர்வாகி
உணர்வெல்லாம் அவனாகி
ஊக்கியாய் ஆக்கியாய்
அகமெங்கும் நிறைப்பவன்
அருமருந்தாகி அரிதாகி
ஆட்கொள்ளும் விடமாகி
அகடனாய் அறிவொழுக
ஆட்கொண்டு நிற்பான் அவன்
என் ஆகுபொருள் அவனேயாக.*

# விலக மறுக்கும் கிரகணங்கள்

*அன்பென்னும் வார்த்தையை*
*ஆயுதமாக்கி மூடர்  ஆசை என்னும்*
*வினை விதைத்து  எம்மை அடக்கிடுவார்*

*ஆதி மூலமே நீ என்பார்*
*அடியில் கிடக்கும் மலர் தாம் என்பர்*
*முற்பிறப்பு தொடருதென்பார்  முடிவுவரை*
*மூலாதாரமாய் இருப்பேன் என்பார்*

*தேவைக்காய் தேடிவந்து திக்குமுக்காட்டி*
*தெருவில் விடுவதற்காய்   தெவிட்டப் பேசி*
*தம்மை எம்முள் விதைத்திடுவார்*

*தேவைகள் முடிந்ததும் தெரியாத யாரோபோல்*
*திடமுடிவெடுத்து எம்மைத் திக்குமுக்காட்டி*
*தெருவிலும் விட்டுடுவார்*

*எதற்காய் எம்மைப் படைத்தான்*
*எதுவுமற்று ஏங்கிடச் செய்து*
*இரக்கமற்று இதயம் உடைத்து*
*தயக்கமற்று தடைகள் கொண்டு*
*சிலதுக்காகச் சிந்தை தகர்த்து*
*மனது கொன்று மகிழ்வு கொன்று*
*திடம் கொண்டு திறமை தகர்த்து*
*வதை கொண்டு வாழ்வு தகர்க்க*
*எதற்காய் எம்மைப் படைத்தான்.*

# அலட்சியம்

*ஒவ்வொரு தடவையும் உன் அலட்சியம்
என் மனதை உருக்குலைக்கவே செய்கிறது.
ஆனாலும் என் அன்பின் அச்சாணியும்
கூடவே உன்னுடன் இறுக்கமாக
பிணைக்கப்பட்டுள்ளதால்
உன்னைத் தூக்கி எறிந்து விட்டு
என்பாட்டில் இருந்துவிட முடியாது
என்னை நானே வருத்தியபடி தவமிருக்கிறேன் .*

*ஆனாலும் ஏமாற்றமும் அதன் எதிர்வினைகளும்
எனக்கு மட்டுமே சொந்தமாக
எக்கணமும் அத்தனையும் விழுங்கி
என் மனம் கொண்டிடும் ஏக்கம் எப்போதுமாக
எதுவும் செய்வதற்று ஏங்கும் மனதின் மூச்சடக்கி
ஏமாற்றத்தின் ஒலியடங்க
எண்ணப்பிரளயத்தின் நடுவில் நிற்கிறேன்*

*ஆனாலும் எப்போதும்போல்
அந்தரத்தில் ஆடும் ஊஞ்சல்
கேட்டுக்கொண்டே இருக்கிறது
தோற்றுக்கொண்டிருப்பது நானா நீயா... ?*

# நிறம் மாறும் நினைவுகள்

*வானவில்லின் நிறங்களாய்*
*உன்னில் பல வர்ணங்கள்*
*நேரத்துக்கொன்றாய்*
*நாளுக்கொன்றாய்*
*நிறம்மாறிக்கொண்டிருக்கிறாய் நீ*

*உன்மீது கொண்ட நம்பிக்கைகள்*
*இன்னும் வெள்ளை நிறமாகவே*
*என்னுள் இருக்கின்றன*
*காற்றடிக்கும் போதும்*
*கடும் மலையின்போதும் கூட அவை*
*நிறம்மாறும் நிலையற்று நிற்கின்றன*

*ஆனாலும் மனம் என்னும் மாயக்கண்ணாடி*
*சூறைக் காற்றின் வாடையில் மெலிந்து*
*சுழல் காற்றில் சிக்கித் தவித்து*
*இழப்பை எதிர் நோக்கும் வலுவற்று*
*ஓடி ஒளிந்துகொள்ள இடம்தேடி*
*ஒற்றைக்காலில் நின்றுகொண்டிருக்கிறது*

*மீட்க முடிந்தவன் நீ மட்டுமே*
*எனினும் பிடிப்பு எதுவுமற்று*
*பேரன்பு சிறிதுமற்று*
*பருவம் தப்பிக் காய்க்கும் மரமாய்*
*பார்த்துக்கொண்டிருக்கிறாய் நீ*

*என்ன சொல்லி என்ன*
*இயல்பே அற்ற உனக்கு*
*ஏற்புரை எது சொல்லினும்*
*எள்விளையா நிலமாய் உன்மனம்*
*இரக்கமற்றிருக்க எப்போதும்போல் நான்*
*எதுவுமே செய்ய முடியாது*
*பார்த்துக்கொண்டிருக்கிறேன்.*

# நெஞ்சக் கூட்டில் பிரளயம்

*கோபத்தின் ஆணிவேர் அசைக்கப்பட்டு*
*கோடுகிழித்து நிறுத்தமுடியாதவாறு*
*கற்பனைகளின் கதவுகள் திறந்து*
*கடிவாளமற்றுக் குதிரைகள் பாய்கின்றன*

*நம்பிக்கைகள் சிதைவதான கற்பனையில்*
*நலிந்து குலைந்து நகர்வதற்கே நாதியற்று நிற்கையில்*
*விருப்பும் வெறுப்புமாய் விதைக்கப்படுகின்றன*
*விளைய முடியாத விதை நாற்றுக்கள்*

*வார்த்தைகளும் அகராதியில் காணமுடியா*
*அதன் அர்த்தங்களும் கடைபரப்ப*
*இதயச் சுவர்கள் எங்கும் இடிமுழக்கங்களாய்*
*இல்லாத வார்த்தைகள் எல்லாம் கூடி*
*இதயத் துடிப்பை இரட்டிப்பாக்குகின்றன*

*துடிப்பின் ஒலி காதில் வேகமாய் மோத*
*விரைந்து பாயும் இரத்தத்தின் வேகம்*
*நரம்புக் குழாய்களில் நகரும் வேகத்தில்*
*நாடிகள் எல்லாம் வலுவிழந்து*
*நடுக்கங்களை உடலெங்கும் பரப்ப*

*மூளையின் கதவுகள் வலுவுடன் திறக்க*
*நரம்பின் வெடிப்பில் நனைந்த தசைகள்*
*கடிவாளமிடவே முடியாதனவாகி*
*கால்கள் மடிந்து கண்கள் சொருக*
*காற்றின் கனதி கலைந்து போகிறது...*

# இமை மூடா நினைவுகள்

*நினைவுகளின் நிர்வாணத்தை*
*மறக்க மறுக்கும் மனதை*
*என்ன செய்வது*

*மறுதலித்தே தொகுத்து*
*மீண்டும் மீண்டுமாய்*
*மாயக்கண்ணாடியில் பார்ப்பதாய்*
*நிழல் பிம்பத்தைத் தோற்றுவித்து*
*நிலைதடுமாற வைக்கிறது*

*காரணமின்றி கண்முன் தோன்றும்*
*கனவற்ற காட்சிகளின் சாட்சி*
*வேண்டுவன எல்லாம் எப்போதும்*
*காரியங்களோடு கைகோர்த்தபடி*
*காயங்களை காணும் இடமெங்கும்*
*கண்மூடி விதைத்தபடி செல்கின்றன*

*காரணங்கள் அற்று நானும்*
*காணவே முடியாதனவற்றை*
*காண்பதான மாயை சுமந்து*
*மீண்டுவரா நாட்களின் தகிப்பில்*
*மனதின் மகிழ்வு தொலைய*
*எந்நேரமும் விடுபட எண்ணிடும்*
*நூலிழை பற்றியே நிதமும்*
*எழுந்துவர எத்தணித்தபடியே*
*எதுவும் முடியாது காத்திருக்கிறேன்.*

# மனவானம்

*மனவானம் இன்று மகிழ்வாய் இருக்கிறது*
*மனதோடு பாடல் மிதமாய் ஒலிக்கிறது*

*கனவான அன்பின் நெகிழ்வில்*
*கடிமனம் கசிவுகொள்ள*
*காலத்தில் கொடுமையைத்*
*தினம் தினம் கொன்று*
*கல்லாய் மாறிய மனம்*
*காற்றுப்பட்ட மரணத்தின்*
*கடைசி மூச்சின் ஒலியாய்*
*கண்விழித்தே கனவு காண*
*கூதல் குறைந்த மனம்*
*குதூகலத்தின் கடிவாளம் சுமந்து*
*குதிரைகளாய் சவாரி செய்ய*
*தொடரும் நாட்களும் தொலைந்திடாது*

*தென்றலாய் வீசும் நம்பிக்கையில்*
*துளிர்விடும் கனவுகளைத் தூக்க முடியாது*
*தூக்கியபடி தொலைதூரம் நடக்கிறேன்...*

# எனக்கு மட்டுமாய்

*வானவெளியின் வண்ணமேகங்களாய்*
*மனதெங்கும் காட்சிகள் வியாபிக்க*
*வசந்தங்களின் வரிசைகளில் மனம்*
*வசமிழந்து போகின்றது*

*அன்பின் பரிமாறல்கள் நிதமும்*
*அவசரமின்றி அரங்கேறி வர*
*அமிழ்தின் சுவை திகட்டி*
*ஆனந்தத்தின் அதிர்வுகள் எல்லாம்*
*அணிவகுத்து நிற்கின்றன*

*குளிர் நிலவின் ஒளிர்வாய் வீசும்*
*கோடையின் தென்றல் கூடி*
*குசுகுசுப்பாய்ச் சேதிசொல்லிக்*
*கூடலின்றித் தவித்த மனதை*
*கும்மாளமிட வைக்கின்றன*

*கார்காலம் மீண்டும் வரலாம்*
*கனவுக்காட்சிகளும் கலையலாம்*
*கனதியுடன் காத்திருக்கும் என்*
*காலாவதியாகா நம்பிக்கைகள்*

*கடைசிவரை எனக்கு மட்டுமாய்*
*கண்மூடும்வரை கலைந்திடாது*
*காற்றுவெளியில் காத்திருக்கும்.*

# மனதின் ஓசைகள் அடங்கிட மறுக்கின்றன

*அன்பின் கணக்குகள் அறியப்படும் நேரமெல்லாம்
ஆள்கிணறுள் தள்ளப்படுவதான உணர்வில்
அங்கவீனமாகிப் போகின்றன அத்தனையும்*

*நேசிப்பின் அர்த்தம் அறியா ஆணவம்
நெகிழ்வின்றி நேர்கோட்டில் செல்கையில்
நலிந்து போன நம்பிக்கைகள் யாவும்
நகர்வதற்கும் சக்தியற்றுப்போகின்றன*

*பொய்யிலும் புனைவிலும் பின்னப்பட்ட
புரிதலற்ற அன்பின் ஒழுங்கற்ற பிணைப்பு
எந்நேரமும் அறுவதாய் அச்சுறுத்தியபடி
நெஞ்சின் நாடிக்களில் நெருக்கமாய் ஓடியபடி*

*இணக்கமற்ற தண்டவாளங்களாய்
இடைவிடாது ஓசை எழுப்பியபடி
விதியின் வலிய கைகள் எனைப்பற்ற
விடாமல் துரத்தியபடியே இருக்கின்றன*

*என்செய்வேன் நான் நிதமும்
எரித்திட முடியா நினைவுகள் கொண்டு
எல்லைகள் அற்ற கற்பனை கண்டு
காரண காரியம் புரிந்திடா மனதில்*

*இடியும் மின்னலும் தொடர்ந்திடக்கண்டு
இயலாமையில் இயல்வதும் கொன்று
எண்ணங்களில் எரிதழல் மூண்டிட
ஏதுமற்றுக் காத்திருக்கிறேன் ஏதிலியாய்...*

# தோற்றுக்கொண்டே...

*மரணத்தின் நுகரமுடியா வாசனையாக*
*வாழ்வின் பக்கங்கள் மடிக்கப்படுகின்றன*
*கேள்விகளும் இல்லாத பதில்களுமாய்*
*வசந்தங்கள் வராத நாட்களின் கணக்கு*
*கிடைக்காத எண்ணிக்கையைத் தினம்*
*தந்தவண்ணமே தடுமாறுகின்றன*

*அன்பின் அசைக்கமுடியாத அளவின்*
*காலத்தின் கணக்குகளும் என்றும்*
*ஏற்றுக்கொள்ளமுடியா நம்பிக்கையின்*
*எதிர்மறை எண்ணங்களைத் தகர்த்து*
*எதுவுமற்ற நிலையை எதிர்கொள்வதாய்*
*எண்ணக் கிடங்குகளில் எப்போதும்*
*நிரம்பியபடியே காத்திருக்கின்றன*

*மறக்கும் நிலையற்ற மனதின் மகிமை*
*மற்றவர் எண்ணத்தை மலிந்ததாக்க*
*பெறுமதியற்ற காலங்களின் நேரங்கள்*
*பெருவாரியாக இறைக்கப்பட்டபடி*
*முகிழ்ந்திடமுடியா மனப்பாறையை*
*மீண்டும் மீண்டும் தகர்க்க முயன்று*
*தோற்றுக்கொண்டே இருக்கின்றன.*

# கதியற்று

அத்தனையும் ஓய்ந்து போனதாக
எதுவுமற்று வெற்றிடமாய் தெரிகிறது
மனம் மரண வீட்டின் ஒலியடங்கலாக
ஒவ்வொரு மூலையும் எதுவுமற்று
வேறு வழி அற்றதான நிலையில்
வெம்பல் அடங்கி வேதனை அடக்கி
வெற்றிடங்கள் மட்டுமே கொண்டதாய்
மன வீட்டின் ஒவ்வொரு மூலையும்
முடங்கிப்போய் இருக்கிறது

போதும் இப்பிறப்பின் போராட்டம்
வாழ்தலின் வழிகள் இருந்தும்
வேரறுந்து வீழ்ந்த மரமாய் மனம்
வேதனையின் விக்கலடக்கி
விதியின் வலிந்த வீழ்த்தலில்
வழிகள் எல்லாம் அடைபட
மூழ்க ஆரம்பித்திருக்கும்
கடல் சூழ்ந்த தீவின் நடுவே
கதியற்று நிற்கிறேன் நான்.

# பழைய பக்கங்கள்

*தெருவோரம் வீசிய காற்றில்*
*தென்னை மர ஓலைகளாய்*
*மனம் அசைந்தாட தேங்கிக்கிடக்கும்*
*பழைய பக்கங்கள் எல்லாம்*
*ஒவ்வொன்றாய் புரள்கின்றன*

*பட்டம் விட்ட காலம்*
*பள்ளிப் பருவ நாட்கள்*
*பதின்ம வயதின் காதல்*
*பாலியத்தின் நட்பு*
*கிளித்தட்டு விளையாட்டு*
*பார்வையின் பரிமாறல்*
*பண்படாத நெஞ்சம்*
*பேருந்துப் பயணம் என*
*பழையனவெல்லாம் வந்து*
*படம் காட்டிச் செல்கிறது*

*மீட்டவே முடியாத அந்த*
*முடிவாகிப் போன நாட்கள்*
*மூச்சின் முடிவு மட்டும்*
*முகம்மோதி அப்பப்போ*
*முட்டும் காற்றாய் நின்று*
*முகவரி தொலைத்ததை*
*முடிவற்ற வலிகளின்*
*முற்றுப்பெறாத வரிகளாய்*
*முட்களாய்த் தைத்தபடி.*

# யாதுமாகி

*நினைவுகளில் எல்லாம்*
*நிமிடத்தில் தீ மூளும்*
*நெஞ்சம் படபடத்து*
*நிலையின்றிக் கனவுகாணும்*

*மனதடக்க முடியாது*
*மட்டிலா மகிழ்வுகொண்டு*
*மிதக்கும் மனது கொண்டு*
*மேகத்தில் நடமாடும்*

*காட்டாற்று வெள்ளமாய்*
*காட்சிகள் சுழன்றாடும்*
*கவலைகள் சேர்ந்ததனால்*
*கள்ளம் குடிகொள்ளும்*

*எட்டாத கோட்டை எல்லாம்*
*எப்படியோ கட்டவைத்து*
*எதிர்பார்ப்பை ஏணியாக்கி*
*எங்கெங்கோஅலையவைக்கும்*

*பசிமறந்து தூக்கம் கெடும்*
*பலபாடல் மனமிசைக்கும்*
*பார்க்காதிருந்தாலே*
*பயித்தியம் பிடித்துவிடும்*

*கற்பனைக் குதிரைகளை*
*கணக்கின்றி அவிழ்த்துவிடும்*
*கடிவாளம் அற்றதாய்*
*காததூரம் ஓடவைக்கும்*

*உறவுகள் கண்மறைக்கும்*
*உற்றவர் தான் மறக்கும்*
*பெற்றவர் என்றாலும்*
*பேரிடராய்த் தோன்றிவிடும்*

*நித்தம் நினைவிழந்து பித்தம் தலைக்கேறி*
*மற்றதெல்லாம் மறக்கவைத்து*
*சித்தம் கலங்கவைக்கும் காதல்*
*செத்தொழிந்து போனாலும்*
*சொத்தழிந்து போனாலும்*
*சித்தம் நிறைந்து சொர்க்கம் திறந்து*
*சொக்கவைப்பது காதல்.*

# சோதனைச்சாலை

*எப்போதும் நான் அப்படியே இருக்கிறேன்*
*மற்றவரைப் புரியமுடியாது*
*உற்றவரின் துயரம் அறியாது*
*கற்பனை வானில் பறந்துகொண்டே*
*கடிவாளமற்ற சிந்தனையோடு*

*என்னைக் காயப்படுத்துவோரை*
*கழற்றி எறிய முடியாதவளாய்*
*மீண்டும் மீண்டும் மனதில்*
*விழுப்புண் தாங்கியபடி*
*விழுங்க முடியாததைதை எல்லாம்*
*எப்படியோ விழுங்கியபடி .........*

*எப்படி மீண்டு வருவேன் நான்*
*பீனிக்ஸ் பறவையாய் மீண்டும் எழ*
*மனம் ஆசை கொள்கின்றது ஆனாலும்*
*சூழ எரிந்து கொண்டிருக்கும்*
*நெருப்பின் வீரியத்தில்*
*கைகொடுக்க யாருமேயற்று*
*காணும் இடம் எங்கும் தீ நாக்குச் சூழ*
*செய்வதறியாது தவிக்கிறேன் நான்.*

# கண்ணீரில் கலந்த கல்வாரி

*உயிரின் ஓலம் ஊரெங்கும் கேட்கின்றது*
*ஏமாற்றங்கள் சுமந்ததான மனவெளியில்*
*ஒப்பாரிப் பாடலாய் ஓயாது கேட்கிறது*
*மீண்டிட முடியாத மரணக் கிடங்கினுள்*
*தெரிந்தே நான் இறங்கி நிற்கிறேன்*
*தெளிவற்ற மனதின் தேய்மானத்தில்*
*தெரிவதெல்லாம் கண்ணில் படாது*
*தேய்ந்துகொண்டே போகின்றது*

*விந்தை தெரியாது வீழ்ந்து மாழும்*
*விட்டில் பூச்சியாய் என் மனம்*
*வெடித்துச் சிதறும் விதைகளாய்*
*வில்லங்கமாய் மண் பற்றியபடி*
*வேறு வழியேயின்றி தினமும்*
*முளைவிடும் வேர்களை ஊன்றி*
*எழுவதர்க்காய் எத்தனிக்கின்றது*

*கலங்கிப் போன காலத்தின் விதியோ*
*கைகொட்டிச் சிரித்தபடி என் முன்னே*
*கண்கட்டு வித்தையில் கைதேர்ந்து*
*காவலிருக்கும் பொழுதுகளை எல்லாம்*
*கடிவாளமிடாது கண்டுகளிப்பதர்க்காய்*
*காலநேரம் பார்த்தபடி எப்போதும்*
*கண் முன்னே காவலிருக்கிறது*

*என்ன சொல்லி என்ன .... என்றோ*
*எழுதிவிட்ட விதியின் வலிந்த இழுப்பில்*
*என்னையறியாது நானும் தான்*
*வீழ்ந்தே கிடக்கிறேன் எழவே முடியாது*
*யாரும் மீட்டுவிடவே முடியாத*
*கற்கள் மூடிய பாறைகள் நடுவே.*

# நேசமாய்

*நீர் சுமந்த காற்று நேசமாய் உடல் தழுவ*
*குளிர்ந்து மனம் குதூகலிக்கிறது*
*மனதின் மட்டற்ற மகிழ்வு*
*திறந்த பறவைக் கூண்டாய்*
*விரிந்து பறவையாய் சிறகடிக்க*
*வானவெளியின் மேகப்பொதிகளிடை*
*புதைந்தும் புதையாது பறந்தோடிப் போகிறேன்*

*எண்ணற்ற கற்பனைக் குவியல்களில்*
*எண்ணங்கள் சிதறிப் பறந்திட*
*சூரியக் கதிர்களின் தெறிப்பில் மனம்*
*வானவில்லின் வண்ணங்கள் கண்டு*
*வரிசையாய் சதிராடி ஒளிர்கின்றன*

*மனதின் பசுமை மகரந்தங்களாய் நிறைய*
*காண்பதெல்லாம் கனவுக்குவியல்களாய்*
*கண்சிமிட்டிக் கடந்து போகையில்*
*நீயும் நானும் மட்டுமேயான வெளியில்*
*நிலவின் பூரிப்பில் நின்மதி கொள்கிறேன்.*

# உயிரிழையின் உன்னதம்

*கற்பக விருட்சமாய் உன்மேல்*
*வியாபிக்கின்றது அன்பு*
*உணர்ந்தும் உணர மறுப்பவனாய்*
*ஒற்றைச் சொல்லில்*
*உணர்விழக்க வைக்கிறாய் நீ*

*கண்டுணர்ந்த பின்னும்*
*காண மறுக்கும் உயிரிழையின்*
*உன்னதம் பொசுக்கி நிற்க*
*சொற்பிறழ்வின் சுமை கனக்க*
*காவ முடியா மனதை கல்லாக்கி*
*காலம் முழுதும் உன்னுடனாய்*
*காவலிருக்க முயல்கிறேன்*

*நேசமறுத்து நினைவகல*
*நிந்திக்கும் மனது கண்டும்*
*நீண்டதூரம் உனக்காக நடக்கையில்*
*நிர்க்கதியாய் நிற்கவைத்து எனை*
*நெகிழ்வற்று நிதம் நீ நிற்கையில்*
*நஞ்சாகிப்போன நாட்களின்*
*நகராத பொழுதுகளின் நினைவுகளில்*
*நாளும் பொழுதும் நான் பொசுங்கும்*
*நரகத்தின் வாசல் மூடி என்*
*நித்தியக் கடனை அடைப்பவனாய்*
*நீயே எனைக் கருணைக்கொலை செய்துவிடு.*

# நினைவுகளின் ஊர்வலங்கள்

*நினைவுகளின் ஊர்வலங்களில் நிகழ்காலம்
இல்லாமலே போய்விடுகிறது
கனவுகளின் காந்தத்தில்
கண்ணில் தெரியும் உண்மைகளும்
காணாமலே போகின்றன*

*நிகழ்காலக் கவிதையாய்
நித்தம் காணும் காட்சிகள்
நிட்சயமற்றதாய் மாற
எதிர்காலத்தின் இயங்கு
நிலைகள் எல்லாம்
எதிர்ப்பின் பாற்பட்டு
எள்ளளவும் ஏற்றமடையாது
எதிர்வீச்சின் கதிர்களில்
எச்சங்களாய் விடுகின்றன*

*மனக்காட்டின் அடர்த்தியில்
மிடுக்கற்றுப் போகும் மின்மினிப்
பூச்சிகளாய் மனதும் மயக்குற்று
மெல்லிழையாய் மேனிதழுவும்
வசந்தமாய் அப்பப்போ வந்துபோகும்
நினைவுக் குதிரின் சிதறல்களில்
நாளையின் நடைபெறா நெஞ்சத்து
நரக நிகழ்வுகளும் நாட்காட்டியாய்
நினைவுகூரப்படுகையில்
முக்காலமும் உணரா மூலவேராய்
மீளாநினைவுகளை மீட்டிசைக்கப் பார்க்கிறேன்.*

# ஊமைக் காயங்கள்

*மனத்தின் அடங்கா மாயைகள்*
*வாழ்வின் நாட்கள் எங்கும்*
*மர்மங்கள் புரிந்திட முடியாது*
*மயக்கம் தந்தபடி இருக்கின்றன*

*உறவின் உயிர் நாடியை*
*உலுப்பிப் பார்ப்பினும்*
*உண்மை உணரமுடியாதபடி*
*ஊமைக் காயங்களை*
*காலம் முழுவதும் விதைப்பினும்*
*உணர்தலுக்கான வலுவை*
*மழுங்கச் செய்கின்றது மனது*

*துணிவின் அப்பாற்பட்டு*
*துரோகத்தின் விளைவின்*
*அறுவடைகள் புரியமறுக்க*
*துவளும் உயிரின் வதையை*
*யாரிடம் போய் எப்படிக் கூறினும்*
*தவறி விழும் புரிதலின் மர்மம்*
*தாங்கொணா விளைவின் நீளலாகிறது*

*காரணங்கள் கொண்ட காரணமற்ற*
*சீண்டல்களும் சிதறல்களும்*
*சிறுகச் சிறுக மனம் சிதைக்க*
*செயலிழக்க ஆரம்பிக்கும் செல்லாய்*
*செய்வதற்றுச் சாகும் மனம்*
*சிதம்பிப்போகும் புண்ணின் காயமாய்*
*சிறுகச் சிறுக சீரற்றதாக*
*மாறிக்கொண்டே இருக்கின்றது*

*மாற்றம் கொள் மனதே இனியும்*
*மடிப்பிச்சை கேட்டு நீ மானமிழந்து*
*மங்கும் உன் நிலை உயர*
*மயக்கம் கொள்ளாதிரு மனமே*
*மானிட வாழ்வின் மகுடங்கள் இன்னும்*
*உனக்கானதாக உயிர்ப்புடன் காத்திருக்க*
*ஊனை உருக்கி நீயும் உயிர்வதை கொண்டு*
*ஊனமாகி மடிந்திடாது பெண்ணே*
*மடமாந்தர் முன்னே மிடுக்கோடிரு.*

# ஓட்டமுடியாத சிறகு

*ஒவ்வொருதடவையும் உன்னால் உதிர்க்கப்படும்*
*என் சிறகுகளை நானே தேடி எடுத்து*
*ஒட்டவைக்கப் பார்க்கிறேன்*
*அத்தனை தடவையும் அவை*
*ஒட்டமுடியாது உதிர்ந்துகொண்டே இருக்கின்றன*

*கற்பனையின் கண்காணாத தேசத்தின் காற்றில்*
*கலைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் மனதின்*
*நிரவ முடியாத பள்ளங்களின் பகுதி*
*எப்போதும் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டு*
*இறுதிநேர வாக்கெடுப்புக்காகக் காத்துக்கொண்டிருக்க*
*எவ்வித நிர்ப்பந்தங்களுமின்றி நீயோ*
*எதிர்வினை புரிந்துகொண்டே இருக்கிறாய்*

*கண்முன்னே ஆடும் கண்ணாம்மூச்சி விளையாட்டில்*
*கண்கட்டி வித்தைக்கான தயார்படுத்தல்களுடன் நீ*
*கணக்கற்றுக் காலங்களை வகுத்தபடி இருக்க*
*காரணமறியாது நானும் எப்போதும்போல்*
*கண்களின் கரைதல்களுடன் காணாமற்போகும்*
*கனதியான நினைவுகளின் தொகுப்பை*
*கூடைகூடையாய்ச் சுமந்துகொண்டு*
*கடக்கமுடியாக் கனவுகளைக் கடக்கமுயல்கிறேன்*

*நாளும் பொழுதும் எப்போதும் உனக்கேயானதான*
*உயிர்ப்பில்லாச் சிந்தனையோடு என்மேல்*
*உருவமில்லாக் கற்களை எறிந்தபடி இருக்கிறாய்*
*எத்தனைதான் தாங்கும் மனம் ஏதிலியாய்*
*என்றோ ஓர்நாள் இதயம் இரக்கம் துறந்து*

*இல்லாப் பொருளின் உண்மை உணர்ந்தால்*
*இல்லாதொளிந்திடும் இத்தனை இடர்களும்*
*அப்போது எல்லாம் இருந்தும் இல்லாதவனாய்*
*என்றும் மீளா துயர் சுமந்து நீ காத்திருக்க*
*எல்லை கடந்து நான் இல்லாதிருந்திடுவேன்.*

## மாயமான்

*மாயமானின் தோற்றம் கண்டு*
*மகிழ்வுகொண்டிருந்தேன் நான்*
*உண்மைக்கும் கற்பனைக்குமான*
*இடைவெளி புரியாது*
*இறுமாப்பு மட்டுமே வாழ்வாகி*
*எல்லாம் மறந்திருந்தேன்*

*நொண்டிக் குதிரையில் பூட்டிய*
*வண்டிலில் இழுப்புக்கெல்லாம்*
*வளைந்தும் நெளிந்தும் கோணலாயும்*
*செல்லும் வழியெல்லாம்*
*விபரமற்று மகிழ்ந்திருந்தேன்*

*வாழ்வு எனக்கு இப்போது வந்ததென*
*வண்ணக்கனவுகள் நாளும் கண்டு*
*ஒவ்வொரு கணமும் கற்பனையில்*
*ஓராயிரம் ஆசைகள் தேங்கிட*
*காலத்தின் கடைசிவரை கணக்கிட்டு*
*காயம் கசிந்துருக நேசம் கொண்டேன்*

*நித்தியமானது நிரந்தரம் அதுவென்று*
*நர்த்தனம் ஆடும் மனது கொண்டு*
*நாளும் பொழுதும் நகரும் கணமெல்லாம்*
*ஓய்ந்துபோகும் காலத்தின்*
*ஒவ்வா நிலையின் கணக்கெடுப்பில்*
*அவ்வாழ்வு கண்டு களித்திருந்தேன்*

*ஆனாலும் ஏன் இப்படியானது*
*அடிமனத்தின் வேரின் விளிம்புவரை*
*அசைத்து அசைத்து அறுத்து வேருடன்*
*ஆலமரத்தின் ஆட்டம் குலைத்து*
*அற்ப மனதின் ஓசைகள் வெல்ல*
*ஆணவம் கொண்டே சிரிக்கிறது*

*வலிந்த விதியின் வண்ணங்கள்*
*ஏற்கும் மனம் எத்தனைதான்*
*ஆர்ப்பரித்து அலைகளாய் எழும்*
*அத்தனையும் அடங்கி ஒடுங்கி*
*அமைதி எப்போ கொண்டுவிடும்*
*அந்த நாளின் வரவிற்காய்*
*ஆறா மனதின் வடுக்கள் சுமந்து*
*அமைதியற்று அலையும் மனதை*
*ஆற்றுப்படுத்தப் பார்க்கிறேன்.*

# ஆழ்கடல் மனது

*ஆழ்கடலின் அலை அயத்தமானது*
*அது புரியாது நானும்*
*அதன் அழகில் மயங்கி*
*அலையின் சீற்றம் புரியாது*
*கடலின் ஆழம் தெரியாது*
*கரையின் ஓரமாய் நின்று*
*ஆர்ப்பரிக்கும் அலை கண்டு*
*அகமகிழ்ந்தே காத்திருந்தேன்*

*அலை உயந்து பின் தணிந்தது*
*சுழன்ற காற்றின் திசையெங்கும்*
*சுழற்றி வாரி நீரை இறைத்தது*
*என்மேல் தெறித்து விழுந்த*
*நீர்த்துளிகள் மேனி நனைக்க*
*அலையின் மகிழ்வில் நானும்*
*ஆர்ப்பரித்து நின்றேன்*

*எழுந்தது எதிரியாய்ப் பேரலை*
*என் அங்கம் அத்தனையும் சுருட்டி*
*ஆத்மாவின் மூச்சை நிறுத்தி*
*சிந்தனை எல்லாம் அழித்து*
*சிகரங்கள் எல்லாம் தொட்டவளை*
*தன்னை நம்பியே நின்றவளை*
*ஆழ்கடலின் இருண்ட அறையில்*
*எழுந்திட முடியாப் பாறைகள் நடுவே*
*எதிரியாய்த் தள்ளி எக்காளமிட்டது*

*என்ன செய்வேன் நான்*
*எழுந்துவர முடியவில்லை*

*எள்ளளவும் இரக்கமில்லை*
*எதுபற்றி எழுந்திடவும் எதுவுமில்லை*
*நம்பிக்கை நகர்ந்துபோக*
*நானாய் எனக்காய்த் துடித்து*
*நெஞ்சக் கூண்டில் நீர் நிரம்ப*
*மூச்சுக் குழல் வெடித்து முகமளுத்த*
*முடியாத போதினில் வழியின்றி*
*மூச்சடங்கிப் போகிறேன் முடிவின்றி.*

# நினைவழியா நீண்ட காலத்தின்

*நினைவழியா நீண்ட காலத்தின்*
*நெடும் பயணத்தின் வழியே*
*மீண்டுமொரு முறை ........*

*அப்போது நீ எனக்காக இருந்தாய்*
*என் எண்ணங்களை உனதாக்கி*
*எப்போதும் நெய்தபடி இருந்தாய்*
*என் நினைவுக்குள் நீயே நினைவாய்*
*எண்ணங்களை எல்லாம் சிறைப்பிடித்து*
*ஏதுமற்றவளாக்கி எனைத் தினம்*
*ஏக்கம் கொள்ள வைத்தாய்*

*நான் மரமாக நீ காற்றாகி மனதின்வழி*
*நாதங்கள் கேட்க வைத்தாய்*
*நான் நிலமாக நீ நீராகி நிதம் எனை*
*நெக்குருகியே நெகிழவைத்தாய்*
*காற்றின் ஒலியாகி கார்கால மழையாகி*
*காணும் இடமெங்கும் என்மனவீட்டில்*
*எங்கும் உன் ஒளியாக ஒளிரவைத்தாய்*

*இன்றும் நான் நானாகவே இருக்கிறேன்*
*நீயோ ஒலிக்காதவனாய் ஒளியற்றவனாய்*
*எதிர்வினை காட்டியே எனைவிட்டு*
*எங்கெங்கோ எட்டாதவனாய் செல்கையில்*
*ஒளியிழந்த உன்மனதின் அறியமுடியாத*
*ஆத்மாவின் அழகைக் காணமுடியாது*
*நீ தூங்கும் நேரங்களிலும் உன் நினைவு சுமந்து*
*தூங்கமுடியாது நானும் காத்திருக்கிறேன்*
*கணக்கில் எழுதமுடியாக் குறிப்புக்களோடும்*
*விழுதுகள் அற்ற ஆலமரத்தின் வேர்களில்*
*இன்றும் தொங்குவதற்காய் ஆசைகொண்டபடி.*

# எனக்குப் பிரியமான உன்னிடம்

*எனக்குப் பிரியமான உன்னிடம்*
*எனக்காக எதுவுமே*
*எப்போதும் இருந்ததில்லை*
*எல்லைகளற்று என் வெளிகள்*
*உனக்காகக் காத்திருக்கையிலும்*
*பற்றேதும் அற்றவனாய்*
*என்முன்னே நீ*

*உருவமற்ற சிந்தனைகள்*
*உள்வெளியெங்கிலும் உன்னுடனே*
*ஊசலாடும் உறவின் விளிம்புகளில்*
*ஊமைக்காயங்களுடன் நான்*
*உன் சிறு பதில்தரும் பசுமைக்காக*
*உறக்கமிழந்து காத்திருக்கையிலும்*
*எதுவுமேயற்று எப்போதும் போல் நீ*

*நீண்டு கிடக்கும் நெடுங்காலங்களின்*
*நெய்யமுடியாத காலக் கசிவை*
*நகர்த்தமுடியாத முடிச்சுக்களோடு*
*நகர்த்தி நிமிர்த்தும் முயற்சியில்*
*நிரந்தரமாய் நிந்திக்கும் வேளையும்*
*நேற்றும் இன்றும் நாளையுமாகி*
*நம்பிக்கைதரும் நியதிகளேயற்று*
*நகர்ந்துகொண்டிருக்கிறாய் என்னுடன் நீ*

*விட்டு விலகிடமுடியா முடிவில்*
*முட்கள் நடுவே நிதம் முட்டியபடி*
*எனைச் சுற்றிலும் எதிர்வினைகள்*
*எதிரும் புதிருமாய் சுழன்றாட*
*கூடு பாயக் காத்திருக்கும் மனம்*
*குற்றுயிராய் தினம் தினம்*
*கொடுவனத்தின் குழிநடுவே*
*கிடப்பதுவாய் காண்கின்றதாய்*
*அப்போதும் அந்தரித்து உழலும்*
*அல்லல் உணரா மனத்தினனாய்*
*அசையா மனதுகொண்டு அசைகிறாய் நீ*

# கடதாசிக் குருவிகள்

*கரைந்து ஓடும் காலங்களின்*
*கரை சேரா நாட்களுடன்*
*கனவுகளைச் சுமந்து*
*கால்கடுக்க நடக்கின்றனர்*
*கண்களை மூடியபடியே*
*காரணம் அற்றவர்கள்*

*காற்றும் சென்றிடமுடியா*
*கனதியான வெளிகளினூடே*
*கர்ப்பம் சுமக்க முடியாதவராய்*
*கருகிப் போனவர் முன்னே*
*கபடு நிறைந்த முகங்களுடன்*
*கல்லறை தேடுகின்றனர்*

*கிரகிக்க முடியாத கணக்குகளை*
*கிஞ்சித்தும் காணமுடியாது*
*கிளர்ந்தெழும் கீற்றுக்களாய்*
*கீழ்ப்படிய மறுப்போர்க்கான*
*கடைநிலைக் கருவறுப்பாய்*
*காகங்களின் கரைதல்கள்*

*கோரமுகங்கள் உருமாற*
*கொடுவினையின் உருவங்களாய்*
*கொள்கைகள் அற்றவராய்*
*கூற்றுக்கள் குதிர்களாக*
*கும்மாளத்துடன் அலைகின்றன*
*காற்றின் கடும் வீச்சில்*
*கலைந்தே குலைந்துபோகும்*
*கனமற்ற கடதாசிக் குருவிகள்.*

# காத்துக் கிடக்கின்றனர்

*அவளின் ஒவ்வொரு வரிகளுள்ளும்*
*பிரவகித்து ஓடும் காதலிக்கப்படுவதான*
*பிம்பங்களின் நிழலில் குளிர் காய்தலில்*
*தம் இழந்து போனவைகளையும்*
*கனவுகளுள் புதைந்து போனதையும்*
*எச்சங்களின் படிமங்களில்*
*எப்படியோ காண்பதான பிரமைகளையும்*
*துலாவமுடியாத இருட்டில் தினம்*
*குருடாகிப் போன கண்களின் வெளிச்சத்தில்*
*தேடியபடியே இருக்கின்றனர்*

*கண்முன்னே காத்திருக்கும்*
*காரணமற்ற வெளிச்சங்களை*
*பார்த்திட முடியாத மனக்குருடாய்*
*மடை திறந்தோடும் மனவாற்றின் வழியே*
*ஆசையின் அகல்விளக்கேற்றி*
*அடைந்திடமுடியாததான அகத்தின் அருகே*
*சஞ்சரிப்பதான பிரமை கூட்டியபடி*
*வீழ்ந்திடாத பழமரங்களுக்காய்*
*கற்களைத் எந்நாளும் எறிந்தபடி.*

# என்னை நானே எழுதப் பார்க்கிறேன்

*என்னை நானே எழுதப் பார்க்கிறேன்*
*எல்லைகள் அற்றவளாய்*
*ஏக்கங்கள் இல்லாத எண்ணிலடங்கா*
*மாற்றங்கள் மனதடைந்து*
*மீட்கவியலாத முடிவிலாத் தூரமதை*
*மனதின் மந்தகாரமில்லா*
*முடிவே அற்றதான முடிதல்களுடன்*
*மிகைப்படுத்த முடியாதபடி*

*புலன்களின் புரிதலற்ற பதுங்குதல்களில்*
*பிடிவாதமாய் பின்னி நிற்கும்*
*படிநிலைகளின் பக்குவமற்ற பதங்கள்*
*பாகுபாடற்று என்றும்*
*பாழ்மனதைப் பலமிழக்கச் செய்து*
*பரிகாரம் தேடித் தேடியே*
*பரிவறுக்கச் செய்கின்றன நிதம்*

*காலங்களின் ஆற்றவும் முடியாததான*
*மாற்றங்களை நிதம் நம்பி*
*மீண்டு வரவே முடியாததான நிலையின்*
*மிகைப்படுத்தப்படும் மிதப்பில்*
*மாயைகளில் மதம்பிடித்தாடும் மனதின்*
*மார்க்கங்கள் என்றும் அறியோராய்*
*மீட்பர்கள் போல் மந்தகாசித்தபடி மனிதர்கள்*

*மாறுகின்ற காட்சிகளின் மனதோடு*
*முகம் முழுதும் மாயத்தோல் போர்த்து*
*மின்மினிகளாய் வானம் எங்கணும்*
*வரலாறு பாடுகின்றன வண்ணத்துப்பூச்சிகள்*
*மனம் என்னும் பாறையில் மட்டும்*
*மாற்றமே நிகழ்த்த முடியாததாய்.*
*மடிந்தபடி இருக்கிறது வசந்த காலம்.*

# மனிதர்

*தேவைகளுக்காய் மனிதர்*
*தினந்தோறும் திரை மனிதராய்*
*நடித்தபடியே நடமாடுகின்றனர்*

*மனதின் ஆழத்தின்*
*அல்லல்கள் அறியாதவராய்*
*சுயநல ஆடையணிந்து*
*நிதம் மாறும் சுவரொட்டிகளாய்*
*காட்சி தருகின்றனர்*

*புரிதல் என்பது புனைதலாகி*
*புரையோடிப்போனதான பந்தங்களின்*
*புனிதமற்ற புழுக்களின் நகர்விலான*
*பாதைகளில் புற்றீசலாய்*
*புறப்பட்டபடி தினமும்*

*பரிதவிப்பும் பயமும் கோபமும்*
*பார்க்கும் இடம் எல்லாமாக*
*பயன் விளையா நிலமாய் நிதம்*
*பக்குவம் கெட்டபடி மனதில்*
*பாறைகளைத் தோற்றுவித்தபடி*

*மனதே நீ மாந்தரை தெரிந்தே*
*மீண்டும் மயக்கம் கொள்ளாதிரு*
*சுயநலம் கொண்ட மாந்தர்*
*சுயத்தை அறிந்தபின்னும்*
*சொப்பன வாழ்வில் வீழ்ந்து*
*சோர்வு கொள்ளாதிரு*
*சிந்தை கொன்று சிறுமை கண்டு*
*சித்தம் கலங்காதிரு மனமே.*

# ஆணிவேரில்...

*மனம் கொண்ட மயக்கம்*
*மங்குவதான தோற்றத்தில்*
*மகிழ்வும் துக்கமும் கலவையாய்*
*கண்ணாம்மூச்சி விளையாட்டாய்*
*கணநேரமும் கருத்தை விட்டு அகலாது*
*கருப்பு வெள்ளையாய் காலம் காட்டியபடி*

*விருப்பு வெறுப்புகளின் அப்பால்*
*விமோசனமடைய விளையும் மனம்*
*குரங்கின் தாவலில் அங்கும் இங்கும்*
*எந்நேரமும் தாவியபடியே தரையில்*
*எள்ளளவும் அமைதியற்று என்னை*
*எதிர்க் கேள்வி கேட்டபடி*

*அன்பின் திளைத்தலில் அடிமுடி தேடியும்*
*அறியமுடியாத நிபந்தனைகளோடு*
*ஆண் என்னும் இறுமாப்பின் கூடுகட்டல்*
*ஆற்றமுடியாத ஆழங்களை என்றும்*
*ஆணிவேரில் பதித்தபடி அல்லல் செய்ய*
*ஆறுதலற்றதாகவும் ஆற்றுப்படுத்த முடியாத*
*அவலங்களையும் சுமந்தபடி*

*எண்ணற்ற கேள்விகளும் அவற்றுக்கு*
*எழுதமுடியாத விடைகளுமாய்*
*ஏக்கம் மட்டும் பாரங்கள் சுமக்க*
*என்றும் நம்பிக்கையற்றதான எதிர்பார்ப்பை*
*எப்போதும் எதிரியுடன் இருப்பதான*
*எதிர்மறை எண்ணத்தையே என்னுள்*
*எங்கணும் விதைத்தபடி*

*எப்போது தீருமோ எப்படித் தீருமோ*
*என்னும் எதிர்மறைக்கப்பால் எந்நாளும்*
*எண்ணத் தாள்கள் ஒவ்வொன்றையும்*
*எடுப்பதும் புரட்டுவதும் படிப்பதுமாய்*
*எல்லாவற்றையும் எதனுடனோ ஒப்பிட்டு*
*எதிர்வாதம் புரிந்தபடி என்னுள்ளே*

*என்ன செய்து என்ன மனிதர்களின்*
*ஏற்புரைகளற்ற எண்ணத்தின் வெளியில்*
*எதுமற்றதாகி எதுவும் புரியா நிலையில்*
*எந்நாளும் விடைகாண முடியா*
*ஏக்கங்கள் எத்தனையோ சுமந்து*
*எதிர்பார்ப்புக்களோடு ஏதிலியாய்*
*ஏழையாகிப் போனதான எண்ணம் மட்டும்*
*என்னுடன் மிஞ்சியதாய் என்றும்.*

## வசந்தங்களாய்த் தொடரும்

*வசந்தங்களாய்த் தொடரும்*
*வாழ்வின் அத்தியாயங்கள்*
*அப்பப்போ ஊடல் என்னும்*
*கீறல் விழுவதாய் மாறிப்போகிறது*

*நித்தமும் காணும் முகங்களுள்*
*நித்தியமாகிப்போன நிதர்சனம்*
*நம்பிக்கையின் கயிற்றால்*
*இறுக வரிந்து கட்டியபடி*

*எதிர்பார்ப்பின் ஏக்கத்தில் எழும்*
*முரண்பாடுகளின் மயக்கம்*
*முட்களாய் நாக்கின் மீதமர்ந்து*
*வார்த்தைகள் விதைக்கின்றன*

*வினைகளின் ஆழம் அறியாது*
*எதிர்ப்படும் எல்லாம் எதிராகி*
*எங்குமாய் சலசலத்து ஓடி*
*எல்லை தாண்டி நிறுத்துகின்றன*

*மனமே நீ மகிழ்வை மட்டும் நினை*
*மனது தாண்டி மதில் உடைத்து*
*இருப்பதை இழந்து ஏங்காது*
*நிறை கண்டு குறை கொன்று*
*நித்தமுமாய் மகிழ்ந்திடு நீ.*

# மனதில் நாம் போடும் கோடுகள்

*மனதில் நாம் போடும் கோடுகள்*
*மற்றவர் அறிவதில்லை*
*எமக்குள் எப்போதும் தோன்றும்*
*எண்ணத்தின் குவியல்களில்*
*எதிரும் புதிருமாய் பல*
*கோடுகளை வரைகிறோம்*

*நேராகி நீண்டு சிலவும்*
*நெளிதல்களோடு பலவும்*
*நெட்டிப் பாய்ந்தபடி சிலதுமாக*
*எப்படியெல்லாமோ வரைகின்றோம்*

*காரண காரியங்கள்*
*அறிந்திடாத மனத்தடத்தில்*
*தண்டவாளமற்றுப் பல*
*வண்டிகள் ஊர்ந்தபடி எப்பொழுதும்*

*மீட்சியற்ற வலைப்பின்னல்களாய்*
*எப்போதும் எம்மனதின்*
*நம்பிக்கை தகர்த்து*
*வலை பின்னும் சிலந்தியாய் வதை*

*புரிந்தும் புரிய மறுக்கும்*
*நிதர்சனம் கொல்லும் உண்மையின்*
*நீட்சியில்லா வாழ்தலில்*
*நித்தமும் கொடுக்குகளாய்*
*கொட்டியவண்ணம் மனம்*
*குருடாய் வெளிச்சம் தேடுகின்றது.*

# உயிரின் வலி அறிவாயோ

*உயிரின் வலி அறிவாயோ மானிடா*
*ஊனுருக்கி உடல் கருக்கி*
*உள்ளனவெல்லாம் மறக்கும்*
*உயிரின் வலி அறிவாயோ*

*உள்ளக் கருவறுத்து*
*ஒவ்வொரு நொடிப்பொழுதும்*
*உயிர் வதைத்து உணர்வு கொல்லும்*
*உயிரின் வலி அறிவாயோ*

*எதுவுமற்று ஏதுமற்று*
*எங்கெங்கோ மனம் அலைத்து*
*ஏக்கங்கள் கொள்ளவைக்கும்*
*உயிரின் வலி அறியாயோ*

*எதிரியாய் எமை வதைத்து*
*எட்டி நின்றே வகுத்து*
*எல்லையில்லா துன்பம் தரும்*
*உயிரின் வலி அறியாயோ*

*எண்ணத்தை எதிரிகளாக்கி*
*எல்லையற்று ஓடவைத்து*
*என்புகள் மட்டுமே ஆனதாய் என்*
*உயிரின் வலி அறியாயோ*

*சரணடைந்து சரணடைந்து*
*சர்வமும் இழக்க வைத்து*
*சக்தியெல்லாம் துறந்து நிற்கும்*
*உயிரின் வலி அறியாயோ மானிடா*
*உயிரின் வலி அறிவாயோ.*

# ஏளனமாய்ச் சிரித்தபடி...

*முந்தை வினை முழுதும்*
*மூர்க்கத்துடன் அறுக்க முனைகிறேன்*
*ஆனாலும் முடிச்சவிழ்க்க முடியா*
*முடிவுகள் அற்றதாய் வாழ்வு*
*நீண்டுகொண்டே செல்கின்றது*

*பிறவிப் பயன் அறிந்திடா*
*பித்தம் தலைக்கேறிய மானிடராய்*
*பேசுபொருளாய் ஆனதில் வாழ்வு*
*படிந்தும் படியாமல் எப்பொழுதும்*
*பயத்துடனே நகர்கின்றது*

*பூனையில் காலின் எலியாய்*
*அகப்பட்டுக்கொண்டிருக்கும்*
*அர்த்தமற்ற வாழ்வின் நகர்வில்*
*அகலமாகிக் கொண்டே செல்கின்றது*
*ஆழ்மனதில் அசைக்கமுடியாது*
*வேர்விட்ட நம்பிக்கைகள்*

*இறுகப் பற்றியிருக்கும் இளையின்*
*இறுமாப்பும் இன்னும் சிறிது நாளில்*
*இல்லாமல் போய்விடுவதற்கான*
*எல்லாக் காரணங்களும் எதிரிகளாகி*
*என் மனத்துடன் ஏளனமாய்ச் சிரித்தபடி*
*எதிர் யுத்தம் செய்கின்றன எனக்காகவே*

ஆர்ப்பரிக்கும் மனதின் அவலம்
ஆழ்கடலில் மோசமாய்ச் சுழலும்
அமுக்கக் காற்றாய் அச்சமூட்டி
அசைக்கமுடியாதென எண்ணிய
ஆசைகளின் வேர்களை எல்லாம்
ஆட்டம் காண வைத்தபடியே
அடித்துச் செல்வதற்குத் தயாராய்
அங்கும் இங்கும் அலைந்தபடி
இறுதியான கணங்களை எண்ணிக்
கலக்கத்துடன் காத்திருக்கின்றன

# மறக்க முடியாத

*மறக்க முடியாத மரணத்தின் வலியாகி*
*துறக்க முடியாத துயரத்தின் வடிவாகி*
*கடக்க முடியாத காலத்தின் கனவாகி*
*சுமக்க முடியாத சுமையாய் இருப்பது காதல்*

*தடுக்க முடியா தவிப்பில் உருவாகி*
*தவிர்க்க முடியா தடைகள் உடைத்தாகி*
*விடுக்க முடியா வேர்கள் விழுதாகி*
*விலக்க முடியா வினைகள் கொண்டது காதல்*

*கொடுக்க முடியாக் கொடைகள் கொடுத்தாகி*
*இழக்க முடியா எல்லாம் இழந்தாகி*
*துறக்க முடியா துறப்பும் துறந்தாகி*
*அடக்க முடியா மனதும் கொண்டது காதல்*

*எதிர்க்க முடியா எல்லாம் எருவாகி*
*ஏற்க முடியா எல்லாம் ஏற்றாகி*
*எதுவும் முடியா எண்ணம் முடித்தாகி*
*எதிர்வினை அற்றிருபது காதல்*

*தொடங்குவது தடுக்கா முடிவாகி*
*தொடர்வது திருட்டின் வழியாகி*
*தேடல்கள் தெவிட்டலில் முடிவாகி*
*தீராப் பகை சொல்வதும் காதலே.*

## வானம் வண்ணமிழந்து

*வானம் இன்று வண்ணமிழந்து அழுகிறது*
*மேகம் கூட நிறமிழந்து பொழிகிறது*
*ஊசிக் காற்று உடலை வருத்த*
*உணர்வுகள் எல்லாம் உடல் சுருக்கி*
*ஒன்றுமற்று ஓடியே செல்கின்றன*

*இளவேனில் மழை இதமாய் நனைத்திடும்*
*கோடையில் மழை குதூகலம் தந்திடும்*
*மாலை மழை மனதை மயக்கிடும்*
*குளிர்கால மழையோ குலை நடுங்கிக்*
*கூதல் ஓடக் கொட்டமடக்கிடும்*

*கோடையை நனைக்க மழை வேண்டும்*
*குழந்தைகள் நனைய மழை வேண்டும்*
*காதலர்களுக்கும் மழை வேண்டும்*
*கனவுகள் கடந்து காலம் காட்டவும்*
*நினைவுகள் களைந்து நின்மதியுறவும்*
*நினைந்து நினைந்து நீ வாராது மழையே*
*நினைக்கும் பொழுதில் மட்டும் நீ வா.*

# மனதில் இருந்து விடுதலை

*மனதில் இருந்து விடுதலை வேண்டும்*
*மறக்க முடியா நினைவுகள் இன்றி*
*மயங்க முடியா மனதும் இன்றி*
*மெலிதல் இல்லாச் செய்யல்களுடன்*
*மேன்மை பெற ஒரு மனம் வேண்டும்*

*செயற்கை அற்ற நட்பினதாய்*
*செயல்கள் எல்லாம் இயல்பினதாய்*
*சுவாசம் எங்கும் நிறைந்திட*
*சுத்தமான மனம் வேண்டும்*

*உயர்ந்த எண்ணம் கொண்டதுவாய்*
*உண்மை என்றும் உள்ளதுவாய்*
*உணர்வு கொண்டு துடிப்பதுவாய்*
*உயர்வாய் ஒரு மனம் வேண்டும்*

*ஆதிக்கம் என்பது அற்றதுவாய்*
*அகந்தை முற்றும் துறந்ததாய்*
*அன்பு கொண்டு என்னைச் சேர*
*ஆண்மை கொண்ட மனம் வேண்டும்*

*நம்பிக்கை கொண்டதுவாய்*
*நம்பிக் கை கொடுப்பதுவாய்*
*நம்பி நானும் நடப்பதற்காய்*
*நெகிழ்வுடனே ஒரு மனம் வேண்டும்*

*நட்டாற்றில் விடுவதுவாய்*
*நம்பிக்கை கொன்று நின்மதி தின்று*
*நினைக்கும் நேரம் நினைத்தபடியாய்*
*நிர்க்கதியாக்கியே நிதம் கொன்றிட*
*நிட்சயமற்றதாய் ஒரு மனம்*
*எப்போது எனக்கு வேண்டினும் வேண்டா.*

## இளகிய காலை ஒன்றில்

*இனிய இளகிய காலை ஒன்றில்*
*மனவெளியில் மட்டற்று மயக்கங்கள்*

*நீண்டு தெரியும் நெடுமரங்களோடு*
*நட்பாய் நடக்கையில்*
*நிமிர்வற்ற மரங்களின் உதிர்ப்பில்*
*நிலம் முழுதும் நிறைந்து கிடக்கும்*
*நிழல் தந்த இலைகள்*
*நெஞ்சமதை நெகிழ்க்கின்றன*

*உதிர்ந்த மரக்கிளைகளில்*
*கொஞ்சலும் கொற்றலும் கூச்சலுமாய்க்*
*கூடியிருந்த புலுனிகள் கூட்டம்*
*கூடி ஒன்றாய் புல்லமர்ந்து*
*கொற்றித் தின்றன எதையோ*
*பின் கூடி எழுந்து கோலமிட்டபடி*
*கண்ணிமை மூடித் திறக்குமுன்னே*
*காணாமலும் போயின*

*மீண்டும் அவை வந்து போகலாம்*
*மிடுக்காய் அமர்ந்து மின்னலாய்ப் பறந்து*
*மாயங்கள் செய்யலாம்*
*காலம் மாறிக் கடும்பனி போனபின்*
*குனிந்த மரங்கள் மீண்டும்*
*குளிர் விரட்டி தளிர் கொள்ளலாம்*

*நாம் மட்டும்*
*தொலைந்த எம் இருப்பை எண்ணி*
*தொலைவிலும் தெரியா துளிர்ப்பும் இன்றி*
*தொன்மை தொலைத்து எம்மைத் தொலைத்து*
*தூரம் தெரியா இடுட்டைத் துலாவி*
*வெளிச்சமற்ற வீதியற்ற வெளியில்*
*தொலை தூரம் செல்லக் காத்திருக்கிறோம்.*

# கண்ணெதிரே காண்பவை

*கண்ணெதிரே காண்பவை*
*கானல் நீராய்த் தெரிகிறது*
*மனிதமற்ற மனங்களின் ஆசைகளின்*
*ஓலங்களில் அகப்படும் உயிர்கள்*
*உன்னதம் இழந்து உயிர்வதை பட்டு*
*உழல்வதே வாழ்வாகி உடைந்து நொறுங்கி*
*ஓட்டமுடியாததான ஓர்மத்துடன் ....*

*நகர்வின் அபிநயங்களில்*
*நல்லவராய் முகம் காட்டி*
*புறத்தே புழுவாய் பேய் முகம் காட்டும்*
*பேடியராய்ப் பலர் பித்தர்களாக்கி எமை*
*பரிதவிக்க வைத்து பரவசம் கொண்டிடுவர்*

*வடிவங்கள் பலவெடுத்து வக்கணையாய்ப் பேசி*
*வஞ்சப் புகழ்ச்சியுடன் வாசனை அற்றவராய்*
*வன்மம் புடைசூழ வஞ்சனையே அவராய்*
*வலிந்த விதியினதாய் வடமிழுக்க முன்னிற்பர்*

*வகை தெரியா மனமே வாழ்வைப் புரிந்திட*
*வண்ணங்கள் அல்ல வாழ்வு ......*
*மேடுகள் காடுகள் பகை நிறைத்த மாந்தர்*
*பகிர்தலற்ற பாள்மனம் மிகைப்பட*
*அனைத்தும் மிகுந்ததே வாழ்வு*

*கல்லாய் ஆக்கிடு மனம்*
*கொல்லா வாழ்வது கொண்டு சேர்த்திடும்*
*முள்ளாய் முரடர் மூர்க்கமாய்க் குற்றினும்*
*வெல்லாமை கொண்டு அவர் வெகுண்டு ஓடிட*
*நில்லாய் நீ மனமே கருங்கல்லாய் நீ தினம்.*

## கல் சுமந்து

*இதயத்தில் கல் சுமந்து பிறந்திடு*
*மனதின் பாரம் அகன்றுவிடும்*
*கண்களில் கூர்மையற்று இருந்திடு*
*குற்றும் வலிகள் அகன்றுவிடும்*
*சிந்தையில் செயலற்று நின்றிடு*
*சேதங்கள் உனைவிட்டு அகன்றிடும்*
*செவிப்புலன் இருந்தும் செவிடராய் இருந்திடில்*
*சேதாரம் இன்றி வாழ்வு நகர்ந்திடும்*
*வார்த்தைகள் இன்றி வலிகள் சுமந்திடில்*
*வழிகள் ஆயிரம் வரிந்தே கண்டிடும்*

*நட்புக்காய் உறவுக்காய் ஊருக்காய் உலகுக்காய்*
*உருக்குலைந்து வாழ்ந்தே நாமும்*
*ஒட்டுண்ணிகளாய் ஓடற்ற விலங்கினமாய்*
*உள்ளும் புறமும் ஒளியற்ற வாழ்வை*
*ஏற்றும் ஏற்காது அலைகின்றோம்*

*எந்திரங்களற்று எதுமற்றவர்களாய்*
*எமக்காய் வாழ்வது எப்படி ?*
*சூதுகளற்று வாதுகள் செய்து*
*சுதந்திரமாய் வாழ்வதெப்படி ?*
*பாதைகளற்றுப் பறவைகளாக*
*பறந்து திரிவது எப்படி?*
*கோதுகளற்று கொடுமைகளற்று*
*கொள்கை வகுப்பது எப்படி?*
*கூடுகளற்று காடுகள் எங்கும்*
*கரைந்து திரிவது எப்படி ?*

*கோடுகள் கடந்து கொண்டவை துறந்து*
*கோலங்களாக காலங்கள் கனியக்*
*காத்திருப்பாயா பெண்ணே நீ ?*

# தடம்

*ஆண்டுகள் ஆயிரம் ஆனது*
*எம் ஆசைகள் நூர்ந்து போனது*
*காத்திருப்புக்கள் கரைந்து*
*காரணம் அற்றதாய் இருப்புக்கள் ஆனது*

*சுதந்திர தேசம் சுடுகாடாய் ஆக*
*சுரணை அற்ற தமிழர் செருக்கழிந்து போக*
*சுற்றி இருந்தவர் எருக்களாய் ஆக*
*சோகம் மட்டுமே மிச்சமாய் ஆனது*

*எத்தனை ஆண்டுகள் கட்டுகள் உடைத்து*
*எதிரிகளின் தூக்கம் தொலைத்து*
*எங்கணும் எம் தடம் பதித்து*
*எத்தர்களை எட்டி உதைத்தோம்*

*அத்தனையும் அன்று எம்மை விட்டு*
*எதிரியிடம் மொத்தமாய்ப் போனது*
*ஆறுதல் சொல்லவும் ஆரும் அற்றதாய்*
*அந்திமக் காலத்தின் அவலமாய் ஆனது*

*அறிவின் தடங்கள் அழிக்கப்பட்டு*
*உயிர்ப்பின் தடங்கள் உருக்கப்பட்டு*
*இருப்பின் தடங்கள் நெருப்பிலிட்டு*
*இல்லாமை ஒன்றே தமிழனதாய்*
*எழவே முடியா இயல்பினதாய்*
*எம்மை எல்லோரும்*
*ஆக்க முனைத்தனர்*

*விடுதலையின் விலங்ககற்ற*
*வேதனைகள் பல விழுங்கி*
*வீரர்கள் பதித்த தடம் இன்னும்*
*ஈரமாய் எம் மண்ணில் இருக்கிறது*
*ஆன்மாவின் அடங்கா ஆவலுடன்*
*எங்கள் எழுகையை எதிர் பார்த்தபடி*

*அழிவின் அகழ்வைப் பிளந்து*
*அறிவின் செறிவைப் பகிர்ந்து*
*விடிவின் வெளிகள் கடந்து*
*தடம்புரளா திடங்கொண்டு*
*தடைகள் தாண்டித் தடம் பதித்து*
*தமிழர் நாம் மீண்டும் தலைநிமிர்வோம்.*

# மரணத்தின் வீழ்ச்சியில்

*காரிருளில் கத்தியின் மேல் நடக்கிறேன்*
*கனவுகள் சுமந்தபடி*
*கடவுளின் காட்சியைக் காண்பதாய்*
*காயங்கள் சுமந்தபடி*
*கண்ணிருந்தும் பார்வையின்றி*
*வாயிருந்தும் பேச்சின்றி*
*மரத்த மனதின் மடிப்புக்களை*
*மனதுள் எண்ணியபடி*
*எக்கணமும் நான் வெதும்பி*
*வீழ்ந்துவிடாதிருக்க*
*அத்தனை வாயில்களும்*
*திறந்தே இருக்கின்றன*
*ஆனாலும் அவாக் கொண்ட மனம்*
*அல்லல் கடந்தும்*
*அடையாளம் இட்டதுவாய்*
*அகலக்கால் வைத்தபடி*
*அரவமின்றி நெடுந்தூரம்*
*நடந்துகொண்டே இருக்கின்றது*
*முன் வினையின் விதியது*
*முடிச்சாகி இறுகித் தினம்*
*மூச்சளக்க வைத்தபடி*
*மனத்தின் குரங்கிடம்*
*மன்றாடவே செய்கின்றது*
*ஆயினும் தெரிந்தே நான்*
*விட்டில் பூச்சியின் வலிந்த*
*மரணத்தின் வீழ்ச்சியில் மெலிந்து*
*நிறுத்தமுடியாத் தூரம் வரை*
*நடந்துகொண்டே இருக்கிறேன்.*

# அளக்கமுடியா அன்பு

அன்பெனும் ஆயுதம் கொண்டு
அடக்குமுறைகள் அத்தனைகொண்டு
அளக்கமுடியா அன்பை நாளும்
அளந்திட முனைகின்றனர்
கரைந்தும் கரைத்திட முடியா
காலம் கரகங்கள் தினம் ஆட
கனதியாகும் மனதின் பாரத்திலும்
கல்லாக மறுக்கிறது மனம்
மூச்சுப் புக முடியா முடிச்சுக்களாய்
மனவறைகள் எங்கணும் இருக்கும்
உண்மைகளின் மாயங்களால்
மண்மூடிய மேடாய் கிடக்கிறது
மனிதமற்ற மாந்தமனம்
வேடங்கட்ட முடியவில்லை
வேறுபாடு தெரிந்த பின்னால் ஆயினும்
வேரறுத்து வெளிநடப்புச் செய்ய
வித்தையும் தெரியவில்லை
நிந்தனை என்மனதை நானே செய்தபடி
நித்தமும் நினைவின் கனம் துடைக்க
முத்தியடையா மனதின் மார்க்கம் தேடி
முன்வினைப் பயன் முடக்க நாளும்
முகமறுக்க முடியாது மருகுகிறேன்.

# ஒற்றை மரக் கிளையாய்....

அன்பெனும் அரிச்சுவடி கொண்டு
அத்தனை உயிர்களும் உலகில்
ஆலமரமாய் விழுதுகொண்டு
ஆணிவேர்வரை ஊன்றியபடி
இலவம் பஞ்சாய் அப்பப்போ
இல்லாமலும் போய் விடுகிறது
ஈனர்கள் சிலர் இற்றவராய்
ஈனவே மனமற்று அன்பை
உணர்வுகள் உக்கிப்போக
உலர்ந்துபோக வைக்கின்றனர்
ஊனமுறு மனது கொண்டு
ஊழ்வினை புரிகின்றனர்
எத்தனை ஏதம் வரினும் பலர்
எந்திரங்களாய் எதுவும் தாங்கி
ஏக்கம் மட்டும் எதிர்வு கூறிட
ஏதுமற்றுக் காத்திருக்கின்றனர்
ஐயத்தின் அதிர்வுகளில் எல்லாம்
ஐம்பொறியும் அடங்கிவிட
ஒற்றை மரக் கிளையாய்
ஒன்றிணைய முடிய மனதை
ஓசையின்றி ஒடுங்கச் செய்து
ஓலங்களை ஒலியிழக்கச் செய்து
ஔடத்தின் வீரியத்தில்
ஔவியம் கொண்டபடியே தினம்.

# முகமற்று

*வசந்த வாழ்வில்*
*வகைப்படுத்த முடியாத*
*பல வண்ணங்கள்*
*வாழ்வின் நீட்சியைக்*
*கூட்டுவதும் குறைப்பதுமாய்*

*வேண்டுவன எல்லாம்*
*வந்துவிடா வாழ்வில்*
*வேண்டாதவையாய்*
*சில வல்லினங்கள்*
*வார்த்தை அடுக்குகளில்*
*வில்லங்கமாய் வந்தமர்ந்து*
*அவிழ்க்க முடியாத முடிச்சை*
*அர்த்தமற்றுப் போடுகின்றன*

*ஆனாலும் வாழ்வு*
*நியதிகளின் நிர்ப்பந்தங்களில்*
*நேற்றும் இன்றும் நாளையும்*
*சுவாசம் நிறைக்கும் காற்றாய்*
*நிழல்களும் நிணங்களுமாய்*
*மனக்கதவின் விளிம்புதடவி*
*முகமற்ற உருவங்களாய்த் தினம்*
*முட்டிமோதிப் போகின்றன.*

# எந்திரங்கள்

*முகம் எங்கணும் மூடி*
*மாயத்திரைகள் பூட்டி*
*முகநூலில் முத்திரைக்காய்*
*மோதுகின்றார் மனிதர்*

*வேடங்கள் போட்டு*
*விதவிதமாய்ப் புனைந்து*
*வித்தகத்தைக் காட்டி*
*வேட்டைக்குக் காத்திருக்கும்*
*ஒரு கூட்டம்*

*விஷம் எங்கும் வேரோடி*
*வித்தைகள் பல காட்டி*
*வெறும் வார்த்தை கொண்டு*
*வேரறுக்கக் காத்திருக்கும்*
*மறு கூட்டம்*

*வார்த்தைகளில் வயகரா*
*தோற்பதாய் தொக்கிநிற்க*
*வருடலாய் சொற்கூட்டி*
*வஞ்சகமாய் வலைபின்னும்*
*வாலறுந்த கூட்டம்*

*மேகப் பொதியை மின்னல்*
*மெதுவாய்க் கலைப்பதுவாய்*
*வாடைகாட்டி மின்னும்*
*மழைநீராய் மெருகூட்டி*
*மனதோடு வாழும்*
*வலையின் சிறுகூட்டம்*

*சிறு பூக்கள் பூப்பதுவாய்*
*சாரலில் நனைவதுமாய்*
*சிக்கனமாய் சிலகூறி*
*சோர்ந்த மனம் சிறகடிக்க*
*சிகரம் தொட்டு நிற்கும்*
*சின்னஞ் சிறு கூட்டம்*

*என்ன சொல்லி என்ன*
*எல்லாமும் எமக்காய்*
*எப்போதும் நிற்பதில்லை*
*ஏற்காத வெளியெங்கும்*
*ஏளன ஏதுக்களாய்*
*எந்நேரமும் மாந்தன்*
*எதுவோ செய்தபடி*
*எந்திரங்களாய் எங்கும்*
*எதிர்முனை எதுவுமின்றி*
*எல்லாம் அவனாய் ஏங்குகிறான்.*

# காலக் கோடுகள்

*காற்று வெளியிடையே கணங்கள்*
*கனதியாய் நகர்கின்றன*
*காணும் காட்சிகளும் விரைவாய்*
*கடந்து தான் போகின்றன*

*கிழக்கில் காணும் கதிரவன்போல்*
*கீழிருந்து மேலேறும் நினைவுகளில்*
*கிரந்தங்களாய் இடையிடை தோன்றும்*
*கிரகிக்க முடியாத கிடப்பில் போட்ட*
*கீறல் கொண்ட நினைவுகள்*

*குறுக்கும் நெடுக்குமான காலங்களின்*
*கனவுக் கோடுகளில் என்றும்*
*கணக்கிடவே முடியாததான*
*கனமான நினைவுகளின் வரிகள்*
*கண்ணிறைத்துக் கனதியாய்க்*
*காலக் கோடுகளை வரைகின்றன*

*கோலமிழந்த நினைவுகளும்*
*குதூகலிக்கும் கனவுக்களுமாய்*
*காலமிழந்த கணக்கற்ற நாட்களின்*
*கண்டுபிடிக்கவே முடியாத*
*காட்சிக் குவியல்களின் நடுவே*
*கண்மூடிக் கர்வமற்றுக் கிடக்கிறேன்.*

# எல்லைகள்

*மனதே ஏன் மயங்கியே நிற்கிறாய்
மனிதர்கள் மனதறிந்தும்*

*முடிவே இல்லா வானப்பரப்பில்
முகில்கள் இல்லா வானமாய்
முகிளா அன்பின் தோற்றமதாய்
மனதே இல்லா மனிதர்களை
மதியற்று நீ தேடுகிறாய்*

*தேவைகளுக்காய் தேடுவார்
அற்றுவிட்டபின் ஓடுவார்
அழகாய்க் கதைகள் கூறுவார்
ஆவி துறப்பதாய்ப் பேசுவர்
அவிழ்க்க முடியா முடிச்சிறுக்கி
ஆனந்தமாய்க் கூடுவார்*

*எதிர்வற்ற எண்ணங்களை
இனம் காண முயலாது
இரக்கமற்று வார்த்தைகள்
இலக்கின்றி வீசியபின்
எதிர்க்கவே முடியாது
எல்லைகள் போடுவார்*

*காலங்கள் காத்திருக்க
கருத்தழியா கல்மனத்தின்
கோடுகள் என்றும் அழிந்திடா
கொடும் கீறலாய் என்றும்
கொடுக்காய்க் குற்றியபடி
கோலங்கள் காட்டியபடி
குற்றுயிர் குலைத்து நிற்கும்.*

# வேண்டுமட்டும்

*எண்ணங்கள் எப்போதும் இனிமையாய் இடம்பெயரும்*
*இல்லாதனவெல்லாம் ஏக்கத்துடன் எண்ணும்*
*நடைபெறமுடியாததும் நடத்திக் காட்டும்*
*ஏற்பிலாதைவையும் ஏற்புடைத்தாக்கி*
*ஏற்புடையதையும் எதிர்க்க வைக்கும்*

*கணமேனும் சிந்தனைச் சிதறலின்றி*
*சிறகடித்துச் செப்படி வித்தைகள் காட்டும்*
*அடைகாத்து ஆசைகளைச் சேர்த்து வைத்து*
*சேர்க்கமுடியா இடங்களில் சேர்க்கும்*

*காலத்தின் காத்திருத்தல் கணமுமற்று*
*காலாவதியான நேரக் குறிப்புகளுமற்று*
*நிர்ப்பந்தம்ற நினைவின் சிறகுவிரித்து*
*நெடு நாட்கள் அலைந்து திரியும்*

*விருப்புவெருப்பற்று வாழ்வின் வசந்தங்களை*
*வில்லங்கமாக்கி விடைகள் பகிரும்*
*வேடங்களற்று வெளிப்பூச்சின்றி*
*வேண்டுமட்டும் விலகியும் நிக்கும்*

*ஆனாலும் மீண்டும் அத்தனையும் அதனிடமாய்*
*அல்லல்கள் கொண்டு அடங்கிடினும்*
*அகந்தை அற எதிர்வினையாய்க் கண் முன்னே*
*அடங்கிட முடியா ஆதங்கமாய் எம்முன்னே.*

# எரிந்துகொண்டே...

*அகால வேளையாய்*
*எந்நேரமும் இருக்கிறது*
*அரவம் எதுவும் கேட்காத*
*ஆட்களே அற்ற தீவில்*
*தனிமையில் இருக்கிறேன் நான்*

*அங்கும் இங்குமாய் அலையும்*
*பாம்பின் விடமாய் உன் நினைவுகள்*
*அலைக்கழித்தபடியே இருக்கின்றன*

*எழுவதர்க்கே ஆதாரமின்றி*
*காற்றைத் துளாவியபடி கையில்*
*எதுவுமே அகப்படாது காத்திருக்கிறேன்*

*அன்பு அன்றி என்னிடம் ஏதுமன்றி*
*நம்புவதற்கும் யாருமின்றி*
*கூறுவதற்கு வார்த்தைகள் இருந்தும்*
*சொல்வதற்கு நீயின்றி எந்நேரமும்*
*எதிரொலிகள் கேட்டு*
*நியாயம் வழங்கவும் யாருமின்றி*
*நிர்க்கதியாய் நிற்கிறேன் நான்*

*எனக்காக எப்போது நீ வருவாய்*
*என் உணர்வு எனைத் தின்று உயிர் குடித்து*
*உரமாகிப் போனபின்னராவது*
*இரக்கம் கொண்டு எரிந்துகொண்டே இருக்கும்*
*என் மனதின் உண்மை கண்டு*
*என்மேல் இரக்கம் கொள்வாயா*
*அன்றி அன்றும் இன்றுபோல்*
*அசுமாத்தமே இன்றி அகல்வாயா ?*

# நிறைய மனங்கள் வேண்டும்

*மனம் என்னும் மாயப் பிசாசு*
*மறைந்திருந்து கொல்லும்*
*எண்ணங்கள் எதிரிகளாக*
*கடிவாளமற்ற குதிரைகளில்*
*காததூரம் கடக்கும்*
*சொற்களற்ற நிழல்களினூடே*
*சொல்லாது விடும்*
*வார்த்தைகள் கோர்த்து*
*சுவற்ற சிற்பங்களாய்*
*கனவுகள் ஆயிரம் வடிக்கும்*
*பகுத்தறிய முடியா*
*உண்மைக்கும் பொய்க்கும் இடையே*
*சஞ்சலம் மட்டும் கொண்டு*
*சக்திகள் எல்லாம் அற*
*சகலதும் துறக்கத் தோன்றும்*
*ஏன் தான் மனிதற்கு மட்டும்*
*இறைவன் ஒருமனம் தந்தான்*
*விருப்பமற்றதை விலக்கி*
*வேண்டாதவற்றை கழற்றி*
*வில்லங்கம் கொண்டதை விடுத்து*
*நின்மதியாய் நான் வாழ*
*நிறைய மனங்கள் வேண்டும் எனக்கு.*

# முடிவிலி

*மனதே ஏன் மயங்குகிறாய்*
*முடிவின்றித் தயங்குகிறாய்*
*எப்போதும் இயங்குகிறாய்*
*எதிர் பார்த்து ஏங்குகிறாய்*
*நிலவைப்போல் நினைவுகளும்*
*நித்தமும் வந்து போகும்*
*நித்தியமானது என்று*
*நிலைத்திடல் ஏதுமில்லை*
*சத்தியமானதது சர்வமும் கண்டதது*
*சிந்தனை செய்வதது சித்தர்கள் போலதது*
*முதிர்வின் மோட்சமது முகிழ்ந்த வானமது*
*மடையின் வெள்ளமென மதர்த்து ஓடுமது*
*கோலங்கள் காணுமது கொண்டதை வேண்டுமது*
*காலங்கள் தோறும் அது கனவுகள் காணுமது*
*சிந்தனைச் செருக்குடனே சிறப்புறப் பேணுமது*
*முந்தை வினை அறுக்க முடிவின்றி ஒடுமது*
*கற்பனை கொண்டதது காலங்கள் கடந்ததது*
*நிந்தனை செய்திடினும் நிரந்தர மானதது*
*வந்தனை செய்யுமது வசையும் பாடுமது*
*விண்ணின் வெளி கடந்தும் வேகமாய்ப் போகுமது*
*சித்தர்கள் கண்டதது சிகரங்கள் கடந்ததது*
*முக்திகள் காணா முடிவிலி வலயமது.*

# காற்றின் இசைப்பில்

*சஞ்சரிப்பின் இலயிப்பில் மனம்*
*சிறகு விரிக்கின்றது*
*ஆயிரம் ஆண்டுகள் ஆனதான*
*எண்ணப் பகுப்பில்*
*எதுவும் நேர்ந்திடாதபடி நான்*
*என்னை நகர்த்துகிறேன்*
*கூடகன்று காற்றின் இசைப்பில்*
*கடந்து போகின்ற காலத்தின்*
*கணக்கில் வரமுடியா*
*நினைவின் தொகுப்புக்களிநூடே*
*நெகிழ்த்திப்போகும் நிழல்கள்*
*நேர்மாறுபட நிகழ்வுகளை*
*நிழல் ஓவியங்களாய் கண்முன்*
*காட்டியே மறைக்கின்றன*
*இன்னும் எத்தனை நாட்கள்*
*இப்படியே வாழ்வு*
*நெஞ்சில் இருப்பவையும்*
*நினைவு தொகுப்பவையும்*
*எழுத்தில் வடிப்பவையும்*
*எண்ணற்றதாகி இதயம் நிரப்ப*
*கற்பனையில் கண்டுணர்ந்த*
*காலத்தின் கைவிடப்பட்ட*
*ஆசைகளும் நிராசைகளும்*
*இறுதிமட்டும் இலக்கற்றதாகி*
*இல்லாமலே போய்விடப் போகின்றன.*

# எமக்கானது

*வாழ்வு எமக்கானது*
*வாழ்வின் பாதைகளும்*
*எமக்கானதுதான் ஆனாலும்*
*சிலரின் பாதை நேர் கோட்டிலும்*
*சிலரது வளைந்து நெளிந்தும்*
*பலரது வாழ்வு*
*மேடு பள்ளம் கொண்டதாயும்*
*சிலரது வண்ண மலர்களின்*
*வசந்தங்களுடனும்*
*வேண்டுமென்றே விதவிதமாய்*
*படைத்த கடவுளை*
*வசை பாடியும்*
*வருத்த முடியவில்லை*
*வித விதமாய் மனிதரை*
*அதில் மலரும் ஆசைகளை*
*உணர்வுகளின் ஒலிகளை*
*ஒருவர்க்கு ஒருவிதமாய்*
*படைத்துவிட்டு*
*ஒப்பீடுகளற்று ஒழுங்கற்று*
*தண்டனைகளை ......*
*தன் தவறை மறந்து*
*எமக்கல்லாவா தருகிறான்*
*ஏதுமற்று எங்கும் இருப்பவன்.*

# காதலே

*இதயத் துடிப்பை இரட்டிப்பாக்கி*
*இல்லாதவற்றை இருப்பதாக்கி*
*இலக்கின்றிச் சுமக்க வைப்பது காதல்*
*சொல்லாதவற்றை சொல்லியதாக்கி*
*காணாதவற்றைக் கண்டதாக்கி*
*கயமை புரிவதும் காதல்*
*விட்டு விட்டு விலகல் காட்டி*
*சொக்கவைக்கும் சொற்கள் கூட்டி*
*நிற்கவைத்து நில்லாதோடும் காதல்*
*எட்ட நின்று ஏங்க வைத்து*
*மட்டற்று மகிழ்வு தந்து*
*மாயையுள் வீழ வைப்பதும் காதலே*
*கண்டதும் காக்க வைத்து*
*கொண்டதும் கோலம் கெட்டு*
*மீண்டிட முடியாதிருப்பதும் காதல்*
*ஆண்களின் சாகசம் வென்று*
*ஆளுமை தன்னைக் கொன்று*
*ஏழ்மையைப் பெண்கள் கொள்ள*
*ஏதுமற்றிருப்பதும் காதலே*
*பிரிந்திட முடியாப் பெண்மை*
*அறிந்திட முடியா ஆண்மை*
*அறுத்திட முடியா உறவு*
*அத்தனையும் கொண்டது காதல்.*

# ஏகாந்தத்தில்

*ஒவ்வொரு நாளின் விடியலும்*
*எதோ ஒன்றை ஆரம்பித்து வைத்தபடிதான்*
*இருக்கின்றது*
*அதை உணர முடிந்தும்*
*உணராதவர்களாய் நாம்*
*ஊர்ந்துகொண்டே இருக்கிறோம்*
*எழுத முடியாத காலங்களின் நிகழ்வுகள்*
*நிரை கட்டியபடி எம்முன்னே*
*நடமாடியபடி தான் இருக்கின்றன*
*நிகழ இருக்கும் காரண காரியங்களில்*
*கூடுகட்டியபடி மனவறைகள்*
*குளிர் காய்ந்து கொண்டுதான் இருக்கின்றன*
*ஆயினும் குரலுயர்த்த*
*முடியாதவர்களாய் நாம்*
*கும்மிருட்டைத் துளாவியபடி*
*கொட்டம் அடங்கிக் காத்திருக்கின்றோம்*
*இருக்கும் சிறகுகளை*
*விரிப்பதர்க்கே பயந்தபடி*
*இல்லாத வானத்தில் நடப்பதற்காய்*
*எந்நாளும் கனவுகள் சுமந்து*
*கற்பனைக் காகிதங்களை*
*எல்லைகளற்றுப் பறக்கவிட்டபடி*
*எந்த நாளிலும் விடியலில் ஆசையற்று*
*ஏகாந்தத்தில் திளைக்கின்றோம்.*

# காலத்தின் விதி

*கூட்டமாய் மேகங்கள்*
*கூடிநின்று கேட்கின்றன*
*கூத்தாடி யாரென்று*
*கான மழைக்காய்க் காத்திருக்கும்*
*கனவு மயில்களின் தோகையில்*
*கலக்கமின்றிக் கலந்துவிட்ட நிறங்கள்*
*காண்போரை மயங்கச் செய்திடினும்*
*காலங்களுக்காய் காத்திருக்க*
*வேண்டியும் தான் அவை*
*கற்பனையில் மிதக்கின்றன*
*காலம் கடந்ததுதான் எனினும்*
*கண்கட்டு வித்தைகள் தெரியாது*
*கனவுகளின் பிம்பங்களை*
*கண்முன்னே கண்டபின்னும்*
*கற்பனைகளைக் காற்றில்*
*சுழலவிட்டபடியே*
*கானமிசைத்திடா மனதில்*
*நம்பிக்கைகளை நிரையாய் நட்டபடி*
*காத்திருக்கின்றது காலத்தின் விதி.*



என் மனதில் எழும் எண்ணங்களும்
நினைவுகளும் பாரம் தாங்க முடியாது
எழுத்துக்களாய் உங்கள் முன்...

